
அருளோசை

திருவள்ளுவர்
ஆண்டு 2005
மாசி
1974 பெஃப்ருவரி

சமய பாட போதனைத் திங்களிதழ்



திருத்தாண்டகம்



பல்லாடு தலைசடைமேல் உடையான்றன்னைப்
பாய்புலித்தோல் உடையானைப் பகவன்றன்னைச்
சொல்லோடு பொருளனைத்தும் ஆனான்றன்னைச்
சுடருருவில் என்பருக் கோலத்தானை
அல்லாத காலனைமுன் அடர்த்தான் றன்னை
ஆலின் கீழிருந்தானை அமுதானானைக்
நல்லாடை புனைந்தருளும் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

—திருநாவுக்கரசர்



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

சிவனடியார் வரலாறு

காரி நாயனூர்

சோழநாட்டிலே, திருக்கடவூரிலே, திருஅவதாரம் செய்தவர் காரிநாயனூர். அவர் தம் பெயரால் சொல்விளங்கிப் பொருள் மறையக் குறையாத கோவையொன்று பாடினூர். அதை எடுத்துக்கொண்டு மூவேந்தரிடத்தும் சென்ருர். அவர்கள் மனம் மகிழும்படி, அதற்குப் பொருள் விரித்துரைத்தார். மன்னர்கள் பெரும் நிதிக்குவை அளித்தனர்.

மன்னவர்பால் பெற்ற பொருளைக் கொண்டு, "வெங்கண் அராவொடு கிடந்து விளக்கும் இளம்பிறைச் சென்னிச் சங்கரனூர் இனிது அமரும்" திருக்கோயில்கள் பல கட்டுவித்தார்.

மனம் உவக்கும் இன்பமொழிப் பயன் யாவர்க்கும் இயம்பித் தேவர்க்கு முதல்தேவராகிய சிவபெருமான் அடியவர்க்குத் தன்னிடம் இருக்கும் பொருளை மிக அளித்தார்.

இவ்வாறு பல அறங்கள் செய்து, திருக்கயிலாய மலையை மறவாத கருத்தினராய் இருந்து, உலகமெங்கும் தம் புகழை நிலைநிறுத்தினூர்.

சிவசிந்தனையுடன், உணர்வும் இடையரு அன்பினராய் இருந்தார். அணிகங்கை தோய்ந்த நெடுஞ்சடையார்தம் அருள் பெற்ற தொடர்பினூல் ஏற்கெனவே திருக்கயிலை மலையின்பால் வாய்ந்த மனம்போல், உடம்பும் திருக்கயிலை மலை சேர்ந்தார்.

வேரியார் மலர்க்கொன்றை வேணியார் அடிபேணும் காரியார் மலர்க் கழல் வணங்கி வாழ்வாம்.

—பழ-தரும-ஆறுமுகம்.

பிரமாதீச ஆண்டு, மாசித்திங்கள் 6-ஆம் நாள் திங்கட்கிழமையன்று (18-2-74) காரிநாயனூரது திருநட்சத்திரமாகிய பூராடம்.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச மாசி 1974 பெஃப்ருவரி	ஓசை 8

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

பொங்கல் இதழினைப் பாராட்டிப் பல அன்பர்கள் எழுதியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி. கடந்த சிலமாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வினாவிடைப்பகுதி அடுத்த இதழிலிருந்து மீண்டும் தொடர்ந்து வெளிவர இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு அன்பான வேண்டுகோள். அருளோசை இதழின் சந்தாதாரர் முகவரிப் பட்டியலை அச்சிட இருப்பதால் தங்கள் முகவரிகளில் ஏதாவது மாற்றங்கள், திருத்தங்கள் இருப்பின் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

மெய்யருள் வியப்பு!

திருவருட்பிரகாசவள்ளலார்

[பல்லவி]

எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
 என்ன பொருத்தமோ ?
இந்தப்பொருத்தம் உலகில் பிறருக்
 கெய்தும் பொருத்தமோ ?

[கண்ணிகள்]

தனக்குநிகரிங் கில்லாதுயர்ந்த தம்பம் ஒன்றதே
 தாவிப்போகப் போகநூலின் தரத்தில் நின்றதே
கனக்கத்திகைப்புற் றங்கேநானும் கலங்கிவருந்தவே
 கலக்கம்நீக்கித் தூக்கிவைத்தாய் நிலைபொருந்தவே!

[எனக்கும்...

இங்கோர்மலையின் நடுவில்உயர்ந்த தம்பம்நணுகவே
 ஏறிப்போகப் போகநூலின் இழைபோல் நுணுகவே
அங்கேதிகைத்து நடுங்கும்போதென் நடுக்கம்நீக்கியே
 அதன்மேல்உயர்ந்த நிலையில்வைத்தாய் அடிமைஆக்கியே!

[எனக்கும்....

என்னதுடலும் உயிரும்பொருளும் நின்னதல்லவோ ?
 எந்தாய்இதனைப் பெறுகஎனநான் இன்றுசொல்லவோ?
சின்னவயதில் என்னையாண்ட திறத்தைநினைக்குதே!
 சிந்தைநினைக்கக் கண்ணீர்பெருகி உடம்பைநனைக்குதே!

[எனக்கும்....

என்னை ஆண்ட வண்ணம்எண்ணில் உள்ளம் உருகுதே!
 என்னைவிழுங்கி எங்கும்இன்ப வெள்ளம்பெருகுதே!
உன்னஉன்ன மனமும்உயிரும் உடம்பும்இனிக்குதே!
 உன்னோடென்னை வேறென்றெண்ணில் மிகவும்பனிக்குதே!

[எனக்கும்...

உன்பேர்அருளை நினைக்குந்தோறும் உடம்புபொடிக்குதே!
 உண்டுபசிதீர்ந் தாற்போல்காதல் மிகவும்தடிக்குதே!
அன்பேஅமையும் என்றபெரியர் வார்த்தைபோயிற்றே!
 அன்போர்அணுவும் இல்லாஎனக்கிங் கருளல் ஆயிற்றே!

[எனக்கும்...



திருவளர் செல்வ,

நல்வாழ்த்துக்கள் !

சென்ற கடிதத்தில் பௌத்தமதத்திற்குக் கடவுள் நம்பிக்கை யில்லை என்பதைக் கண்டோம். இந்தக் கடிதத்தில் பௌத்தம் ஆன்மாவை–உயிரைப்பற்றி என்ன நினைக்கிறது என்பதை எழுதுகின்ருேம்.

திருவளர் செல்வ, 'மாற்றம் உலகத்து இயற்கை' என்ற பழமொழியை நீ கேட்டிருப்பாய். இஃது ஓர் அருமையான பழமொழி; பொருள் பொதிந்தது. அதுமட்டுமல்ல. பௌத்தர்கள் பார்வையில் சிக்கலானதுங்கூட. மாற்றம் உலகத்து இயற்கை என்ற பழமொழியைத்தான் வேறு வேறு வார்த்தைகளில் ஆன்ருேர் பலர் எடுத்துக் கூறியுள்ளனர். ஆங்கிலக் கவிஞர்களில் டென்னிசன் மிகச் சிறந்த கவிஞன். அவன் சொன்ஞன், "The old changeth and new yielding place" என்று. அதாவது 'பழைமை மாறுகிறது; புதுமை இடம் பெறுகிறது' என்பதாகும். இதனையே "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே" என்பது ஆன்ருேர் மொழி. இங்கு மாறுதல் என்ற தத்துவம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஆனுல், பொருளில் மாற்றங்கள் இல்லை. வழக்கங்களில் மாறுதல். தெளிவாகச் சொன்னுல், குறையுடைய பொருள்கள் நிறையுடையனவாக மாறி வளர்கின்றன. சுவை யற்ற பொருள்கள் சுவையுடையனவாக மாறுகின்றன.


வளர்ச்சி, மாறுதலின்பாற்பட்டது. வளர்ச்சி முதலில் பயன் படுதலையும் இறுதிநிலையில் நிறைநிலையடைதலையும் நோக்க மாகக்கொண்டது. உதாரணத்திற்கு 'அவன் மாறிவிட்டான்' என்று மக்கள் கூறுவதைக் கேட்டிருப்பாய். என்ன பொருள்? நாம் முன்னர்க் கூறியதற்கு மாருக நல்லவனுக இருந்தவனும் தீயவனுக மாறிஇருக்கலாம். ஒருவர் மகட் கொடையின் பொழுது தொகை வாங்கக் கூடாது. அதாவது, வரதட்சணை கூடாது என்று எண்ணியவர்-எழுதியவர்-கவிதை செய்தவர் அவருடைய இளவலுக்குத் திருமணம் பேசும்பொழுது மணமகள் வீட்டாரிடம் தொகைகேட்டுத் தொல்லை கொடுக் கிருர்என்ருல், நல்லவர், கெட்டவராக மாறியிருக்கிருர் என்பது பொருள். எப்பொழுதும் தற்சார்புநிலை முறுகி வளருமானுல் குற்றங்கள் பெருகும். தீமை வளரும். பிறர் நலம் கருதும் உணர்வு வளருமானுல் குற்றங்கள் தோன்ரு. தீமைகள் தலை காட்டா. ஒரோவழி குற்றங்கள் போன்றவை தோன்றினு லும் அது தீமையைத் தராது, நன்றினைப்போல நயத்தினைத் தரும். அதுபோலவே தீயகுணங்களையுடையார் தம்முடைய வாழ்வியலைச் சிந்திப்பதன் மூலம் குற்றம் நீங்கிக் குணம் பெறுதல் உண்டு. குற்றம் நீங்கிக் குணம் பெற வேண்டும்-குறை நீங்கி நிறைபெற வேண்டும் என்பதற்குரிய சாதனங்கள்தானே கற்றல், கேட்டல், செயற்படுதல், வழிபாடு செய்தல், பலரொடு பழகல், நட்பினைப் பெறுதல், வாழ்க்கைத் துணை நலம் நாடிப்பெறுதல் ஆகியவை! இவை அனைத்தும் மனிதன் நிறைநோக்கி ஏறும் படிகள். ஆனுல், கொடுமை, படியிற் காலை வைப்பதற்குப் பதில் படியின் இடுக்குகளில் காலை வைத்துச் சிக்கித் தவிப்பதைப்போல இன்று கருத்தில் காலூன்ருமல் வழுக்கிவீழும் நிலை தோன்றியுள்ளது. இன்று கற்றல் குறைநீங்க அல்ல; குணம் பெற அல்ல-தேர்வில் வெற்றி பெற; அதனைத் தொடர்ந்து திருமணம் என்ற பெயரால் பணம் பெற!

இன்று கேட்டல் பகைமறக்க அல்ல; பண்பினை வளர்க்க அல்ல. அஃதொரு ரசனை. தெருவோரத்தில் கிடக்கும் மலத்தினைப் பன்றிகள் சுவைத்திடுதல்போல் தரம் குறைந்த-வஞ்சனைக்கும் விஞ்சிய இரட்டுறமொழிதல், கிண்டல், கேலி, அருவெறுக்கத்தக்க போட்டாபோட்டிகள், மறைவான கழி

சடை அரசியல் ஆகிய செய்திகளைக் கேட்பதிலேயே மக்களுக்கு ஆர்வம்! இந்த இரங்கத்தக்க நிலையைச் சிலர், 'காலட்சேப'த்திற்குப் பயன்படுத்துகின்றனர். இத்தகு செய்திகளைக் கேட்டலால் மனிதன் ஏறமாட்டான்; இறங்கு வான். சிந்தனை, இன்றைய மனிதன் மறந்துவிட்ட ஒன்று. பலர், வயிற்றுப்பசித் தூண்டுதலால், நாளைய வாழ்க்கையில் அச்சம் இருப்பதால் குறுகிய வட்டத்தில் செயற்படுகின்றனர். அவர்களுக்குச் சொர்க்கம் சோறே! என்ன பயன்? வழிப்படுதல் என்பதுதான் வழிபாடாயிற்று. ஆனல், இன்றைய வழிபாடு சூடம்-சம்பிராணியாகிவிட்டது. தூய்மையை வளர்க்கும் வழி பாட்டு நிறுவனங்களோ தொழிற்சாலை மயமாகிக்கொண்டு வருகின்றன. நண்பர்களோ கிடைப்பது அரிது. சுந்தரருக்கே இந்த உலகத்தில் நண்பன் கிடைக்காமல் சிவ பெருமான் நண்பனுக வந்தான். நாம் என்ன அவ்வளவு தவம் செய்திருக்கிறோமா, பரசிவத்தை நட்பாகப்பெற? இன்றைய நண்பர்கள் உற்றுழி உதவுபவர்கள் அல்லர்; உதவி பெறுபவர்களே! உடுக்கை இழிந்துழி உதவுபவர்களல்லர். பார்த்தால் 'நிர்வாணம் பைத்தியம்'! என்று பழிதூற்றுவார்கள். உலகத்திலேயே மனிதவாழ்க்கையில் குற்றம் தெரியாத உறவு இரண்டு. ஒன்று தாய் உறவு. மற்ருென்று நட்புறவு. அடுத்துத்தான் மனைவியுங்கூட. ஆனல், இன்றோ செவி நிறைய வந்துபுகும் பிறர் குற்றங்களைப் பற்றிய செய்திகளைக் கேட்கும்போது வள்ளுவர் வெறுத்த சிறுமை மலிந்துவிட்டது என்பது என்னவோ உண்மை என்று தெரிகிறது. இன்றும் பலர் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆம்! அவர்களுடைய திருமணத்தின் நோக்கம் வளர்வதல்ல. அதற்கு மாருக இன்பத்துய்ப்பு; வயிற்றுக்குச் சோறு ஆகியவையே. வள்ளுவர் நெடிய பயணத்தை மேற்கொண்டுள்ள மனிதனுக்கு ஒருத்தியைத் துணையாக்கினர். அதுமட்டுமல்ல, துணையென்ற சொல்லுக்கு நலத்தைச் சேர்க்காமல் துணைக்குப் பின்னே நலம் என்ற சொல்லைச் சேர்த்ததால், அவன் அவளைத் துணையாகப் பெற்றதால் பெற்றநலம் என்பதே பொருள். சேக்கிழார் 'கும்பிட்ட பயன்' என்பதைப் போல் துணை நலம் என்ற சொல்லுக்குப் பொருள் காணவேண்டும். இத்தகைய துணை நலம் நாட்டில் அருகி விட்டது.

திருவளர் செல்வ, எதையோ எழுத நினைத்தோம். கடிதம் வேறுவகையில் நீண்டு விட்டது. மீண்டும் நினைவுக்குக் கொண்டுவா! மாறுதல் உலகியற்கை. ஆம்! குறையுடையன் நிறையுடையவனாக மாறி வளரவேண்டும். மாறுதல் பொருளில் அல்ல; பொருளின் தன்மையில்! பௌத்தம் மாறுதல் இயற்கையென்று ஒத்துக் கொள்கிறது. மாறுதலே உலகியல் என்று கூறுகிறது. ஆனால் ஒரேயொரு வேறுபாடு. பௌத்தத்தின்படி மாறுதல்தான் உண்மையே தவிரப் பொருள் உண்மையல்ல. பௌத்தம் எந்த ஒருபொருளும் உள்ளது என்றோ, உண்மை என்றோ ஒத்துக்கொள்வதில்லை. பௌத்தத்திற்குக் கடவுள் உண்டு என்ற கொள்கையும் இல்லை. அதுபோல ஆன்மா உண்டு என்ற கொள்கையும் இல்லை. அடுத்த கடிதத்தில் தொடர்ந்து எழுதுவோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.



உ

திருச்சிற்றம்பலம்

பிரியேன் என்றல்

முன்னொருநாள் மயங்கினன்! நீ மயங்கேல் என்றெனக்கு
முன்நின்றுருக் காட்டினை நான் முகமலர்ந்திங்கிருந்தேன்
இன்றும்வரக் காணேன்நின் வரவெதிர் பார்த்தே
எண்ணிஎண்ணி வருந்துகின்றேன்! என்செய்வேன்! அந்தோ
அன்னையினும் தயவுடையாய் நின்தயவை நினைத்தே
ஆருயிர்வைத் திருக்கின்றேன்! ஆணை இது கண்டாய்!
என்இருகண் மணியே! என் அறிவே! என் அன்பே!
என்உயிர்க்குப் பெருந்துணையே! என்உயிர் நாயகனே.

—திருவருட்பா.



கோயம்பேடு குசலவபுரீசர் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி ஏ, பி.எல், ஐ ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

சென்னை நகருக்கு மேற்கே ஆறு கல் தொலைவில், பூவிருந்த வல்லிக்கு அருகில், பெங்களூர்க்குச் செல்லும் நெடுஞ்சாலையில் கோயம்பேடு என்னும் கிராமம் உள்ளது. அது தற்காலத்தில் ஒரு சிற்றூராகக் காட்சியளிப்பினும், முற்காலத்தில் புகழ்பெற்ற சிறந்த இடமாக விளங்கியிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

அழகிய காட்சியும், அமைதியான சூழ்நிலையும் வாய்ந்து விளங்கும் இச்சிற்றூர், ஒரு சிறந்த தலமும் ஆகும். இங்கே ஒரு சிவபிரான் கோயிலும், ஒரு பெருமாள் கோயிலும் எழிலுற அமைந்து விளங்கு கின்றன. இவ்வூர்ப் பகுதியின் இயற்கை எழில்நலம் கண்டு வியந்து மகிழ்ந்த சிவபிரான், இந்த இடத்தை மிகவும் விரும்பி, இங்கே ஒரு சுயம்பு லிங்கமாகத் தோன்றித் திருக்கோயில் கொண்டருளினர் என்பது தலவரலாறு.

குறுங்காலீசுவரர் :

இச்சுயம்புலிங்கம், பிறகோயில்களிற் போலக் கிழக்கு அல்லது மேற்குத் திசைநோக்கி இராமல், வடக்குத் திசை நோக்கி விளங்குகின் றது. இஃது இங்கு ஒரு தனிச்சிறப்பான நிலை எனலாம். இலிங்கம், ஆவுடையாருக்கு ,மேலே மூன்று அல்லது நான்கு அங்குல உயரம் மட்டுமே உடையதாக இருக்கின்றது. அதனால், குறுங்காலீசுவரர் எனவும் சுவாமிக்கு இங்கு ஒரு பெயர் உண்டு. அம்பிகையின் பெயர் தர்மசம்வர்த்தினி (அறம் வளர்க்கும் செல்வி) என்பது.

குசலவபுரீசர் :

இராமபிரான் புதல்வர்களாகிய குசன், லவன் என்பவர்கள், தமது இளமைப் பருவத்தில் வான்மீகி முனிவரிடம் அருங்கலைகள் பயின்று வந்தபோது, இராமபிரான் அசுவமேத வேள்வியியற்றித் திக்குவிசயம் செய்து வருமாறு விடுத்த குதிரையைத் தடுத்துநிறுத்தி, இன்னார் என்று அறியாமல், தம் தந்தையாகிய இராமபிரானை எதிர்த்து நின்று போரிட்டனர். பின்னர் வான்மீகி முனிவரால் உண்மையுணர்ந்தனர்.

தம்முடைய தந்தையாகிய இராமனைத் தாமே எதிர்க்க நேர்ந்த குற்றம் தீரும்பொருட்டுக் குசலவர்கள், இங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபட்டனர். அதனால் இவ்வூருக்குக் குசலவபுரி என்றும், இறைவனுக்குக் குசலவபுரி ஈசுவரர் என்றும் பெயர் வழங்குவதாயிற்று. குசலவர்கள், இராமன் விடுத்த அசுவமேத யாகக் குதிரையினைத் தடுத்து நிறுத்திய வரலாற்றைக் குறிக்கும் சிற்பம் ஒன்றும் இக்கோயிலில் அமைக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்தற்குரியது.

வைகுண்டவாசப்பெருமாள் :

குசலவ புரீசுவரர் கோயிலை அடுத்து, மிக அருகில் அமைந்துள்ளது பெருமாள் கோயில். அங்கு எழுந்தருளியுள்ள பெருமாளுக்கு வைகுண்டவாசப் பெருமாள் என்பது பெயர். இவர் வான்மீகி முனிவரால் வழிபடப்பெற்ற மாட்சிமையுடையவர். வான்மீகி முனிவர் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்ததற்கு அடையாளமாக, இக்கோயிலில் வைகுண்டவாசப்பெருமாள் மூலத்தான மூர்த்தியாக விளங்குவதுடன், இராமர்–இலக்குவர்–சீதை–லவகுசர்–வான்மீகி ஆகியவர்களின் உற்சவ விக்கிரகங்களும், சிறப்புற அமைந்து திகழ்கின்றன. கனகவல்லித் தாயார் என்பது இங்குள்ள பிராட்டியினுடைய பெயர்.

முடிவுரை :

இங்குள்ள கோயில்கள், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராசன் என்னும் ஜெயங்கொண்ட சோழனும் (கி.பி. 985-1014), கி.பி. 11-ஆம் நூற்றாண்டில், திரிபுவன சக்கரவர்த்தி என்னும் மூன்றாம் குலோத்துங்க சோழனும் (கி.பி. 1070-1120), நன்கினிது பரிபாலிக்கப் பெற்று வந்தன எனக் கல்வெட்டுகளாற் புலனாகின்றது. விசயநகர் அரசர்களில் ஒருவரான புக்கராயர் (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு) என்பவர், இந்தத் தலத்தில் மிக்க ஈடுபாடும் அன்பும் கொண்டிருந்தார். சுமார் ஆயிரம் (1000) ஆண்டுகளுக்கும் முற்பட்ட இத்தலத்திற்கும், கோயில்களுக்கும் சென்று தரிசித்து, அன்பர்கள் அனைவரும் நலம்பெற்று மகிழ்ந்து உய்வார்களாக.

—:×:—

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(7)

திருவரங்கத்தில் இராமாநுசர்

திருவரங்கப் பெருமாள் அரையர் போகும் வழியெல்லாம், ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிற தமிழ்மறையை இன்னிசையோடு பாடிக் கொண்டே சென்ருர். அதைக் கேட்டுக்கொண்டே வழிநடந்த இராமாநுசரும், திருவரங்கத்தின் பெருமைகளை மனத்துள் எண்ணி மகிழ்ந்தார். அரங்கனின் பேரருளைக் குறித்து வியந்தார். இவ்விதம் இருவருமே இறைக்குணங்களில் ஈடுபட்டுத் திருவரங்கத்தை அடைந்தனர். அங்கு வடதிருக்காவேரியில் இராமாநுசரும், அரையரும், மற்றும் உடன் வந்த சீடர்களும் நீராடித் திருமண்காப்புக்களை அணிந்து கொண்டனர்.

இராமாநுசர் சீடர்களுடன் திருவரங்கத்துக்கு வந்துவிட்டார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. பெரியநம்பிகளும், பாகவதர்களும் இராமாநுசரை எதிர்கொண்டு அழைக்க வந்தனர். கோயிற் பெரியவர்களும் பல்லிசை முழங்கப் பூரண கும்பம் கொண்டுவந்து நின்றனர். இராமாநுசரும் தமது அனுட்டானங்களை முடித்துக்கொண்டு, பெரிய நம்பிகளையும், மற்ற பாகவதர்களையும் கீழே வீழ்ந்து வணங்கினர். பிறகு, வந்தவர் எதிர்கொள்ளத் திருக்கோயிலுக்குப் புறப்பட்டார். திருமதில்களைக் கடந்து சென்று, கோபுரவாயிலை அடைந்தார். திருவரங்கனை மனத்துள் வழுத்தி ஒருகணம் நின்ருர். பின்பு பலி பீடத்தையும், கொடிக் கம்பத்தையும் பணிந்து போற்றி, அதிசேடனுன மணிப்பெட்டகம் போன்ற சந்நிதியை வலம் வந்து, 'ஓம்' என்ற பிரணவ வடிவமாய்க் காட்சியளிக்கும் விமானத்தை வணங்கித் திருமண்டபத்தை அடைந்தார். பின்பு பெரியநம்பிகளாகிற ஆசாரியரைப் பின்தொடர்ந்து உள்ளே சென்று பெரிய பெருமாளைச் சேவித்தார். "கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னை என்று கொலோ கண்குளிரக் காணு(ம்) நாளே" என்று குலசேகராழ்வார் வேண்டியபடி அங்குள்ள 'திருமாமணித்தூண்' என்ற தூணைப்பற்றி நின்று வெளியே வர மனமின்றி, அழகிய மணவாளனுகிற அமுதத்தைப் பருகி நின்ருர். இப்படித் தன்னை மறந்து இறைவனிடத்து ஈடுபட்டிருக்கும் இராமாநுசரைப் பெரியநம்பிகள் தொட்டு எழுப்பிக் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்தார். அதைக்கண்ட யாவரும் 'இராமாநுசருக்கு உள்ளது போன்ற கடவுள் பக்தி நமக்கு இல்லையே' என்று தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.

பெரியநம்பிகள் இராமாநுசரைத் திருமாமணி மண்டபத்தில் அமர்த்தி 'இராமாநுசரே, பெரிய பெருமாள் உமக்குத் திருவரங்கச்

செல்வத்தை வழங்கியுள்ளார். அதோடு இத்தலத்தில் உள்ளவர்களெல்லாம் வாழ்த்தும்படியாக, உமக்கு இந்நன்னாளில், யாவருக்கும் ஆசாரியனாய் விளங்கும் முதன்மையையும் அளித்துள்ளார். ஆதலால் இன்றுமுதல் நீரே இவ்வூராரின் சார்பாகக் கோயில் திருப்பணிகளையும், நித்திய பூசைகளையும் திருவிழாக்களையும் முறைப்படி செய்வித்து அவன் திருவடியைப் போற்றி வாழ்வீராக' என்று ஆணையிட்டார்.

"இப்பதி முதலநூற் றெட்டி யாமுறை
மெய்ப்பதி முதன்மையும் சமய மேன்மையும்
செப்பருஞ் செல்வமா மிரண்டின் சீர்மையும்
ஒப்பருஞ் தகைமைசா லுனக்குத் தந்தனம்.

[அரிசமயதீபம்—58]

என்கிற பாட்டின்படி இறைவனது அருளாகப் பெரியநம்பிகள் பணித்த திருப்பணிகளை இராமாநுசர் செய்து வந்தார். திருவரங்கம் முழுவதையுமே பூஞ்சோலையாக்கிக் களித்தார். பெரியாழ்வாரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் நந்தவனம் அமைத்து, பரிமளமுள்ள மலர்களை உற்பத்தி செய்து, அவைகளை மாலையாகக் கட்டிப் பரமனுக்குச் சாத்திக் களித்தது போலே, தாமும் நிரம்பத் தோட்டங்களை அமைக்கச் சொல்லி அவைகளில் நறுமணமுள்ள மலர்களை உண்டாக்கி அரங்கனுக்குச் சாத்தும்படி ஏற்பாடு செய்தார். உரிய காலங்களில் கோயிற் பூசைகளை நடத்தி வைத்தார். இராமாநுசருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நடந்து வந்த அரையர் சேவையினை (அபிநயத்தோடும் தாளத்தோடும் கூடிய பிரபந்தத் தமிழிசையை) மிகவும் உற்சாகத்தோடு நடைபெறும்படி ஏற்பாடு செய்தார். "நாளும் மலிவிழா வளமும் சிறக்கும் காழிச்சீராம விண்ணகரம்" என்ற திருமங்கை மன்னன் வாக்குப்படி பலவிழாக்களை நடத்தி விழாமலி மூதூராக்கினர்.

3. வில்லியின் காதல்

இராமாநுசர் காலத்தில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சிற்றரசன் அகளங்கன். இவன் சோழ மரபினன். இவன் அரண்மனை வேலையாளர்களில் ஒருவன் உறங்காவில்லி என்பவன். இவ்வில்லி பெருவீரன். வலிமை வாய்ந்த சரீரத்தையுடையவன். மல்லர்களுள் பெருமல்லனாகவும் திகழ்ந்தான். இவன் அரச காரியங்களில் உறங்காமல், நம்பிக்கையோடு ஈடுபட்டு வந்ததால் உறங்கா வில்லி என்று அழைக்கப்பட்டான். இவனுக்குப் பொன்னாச்சி என்ற பெயரில் அழகே உருவான மனைவி ஒருத்திஇருந்தாள். தெய்வ மாதோ என்று வியக்கத்தக்கபடியிருந்த அவள் வடிவழகில் குறிப்பாகக் கண் அழகில் வில்லி ஈடுபட்டிருந்தான். அரண்மனையில் வேலை முடித்து வந்தவுடன் அவளுடனேயே எப்பொழுதும் பிரியாமல் இன்பம் அனுபவிப்பான். இப்படியிருக்கும் நாளில் திருவரங்கத்தில் வசந்த விழா நடைபெற்றது. அவ்வசந்த விழாவினைக் காண அவன் மனைவியான பொன்னாச்சி ஆசைப்பட்டாள். இவர்கள் காவிரிக்கு எதிர்க்கரையிலுள்ள திருவெள்ளறை என்ற ஊரில் வசித்து வந்தனர். அங்கிருந்து தான் நாள்தோறும் இவன் உறையூருக்குச் சென்று அரண்மனையில் வேலை பார்த்து வந்தான்.

உறங்காவில்லி வசந்தவிழாவுக்குப் பொன்னாச்சியோடு திருவரங்கத்துக்குப் புறப்பட்டான். வழியில் காவிரியைக் கடக்கவேண்டும். 'வெயிலில் இப்பூங்கொடி வாடிவிடுமோ' என்று அஞ்சினான். அவள்

பொன்னொளிர்மேனி வாடாதிருப்பதற்காக ஒரு குடையை அவள் தலைக்கு நேரே பிடித்தான். அகளங்க சோழன் திருமணப் பரிசாக அளித்த விலையுயர்ந்த பொற்பட்டாலான மேல் வேட்டியை அவள் நடந்து வரும் ஆற்று மணலில், அவள் மலர்போன்ற அடிகள் வருந்தா வண்ணம் நடைபாவாடை இட்டான். அதன்மேல் மெல்ல மெல்ல அவளை நடத்திச் சென்றான்.

அந்தச் சமயத்தில் இராமானுசர் தம் சீடர்களுடன் காவிரியில் நீராடி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். சீடர்கள், வில்லிதம்பதிகளின் காட்சியைக் கண்டனர். 'இப்படியும் ஒரு பெண்பித்தன் இருப்பானா?' என்று வியந்தனர். தங்களுடைய குருவான இராமானுசரிடம் அக்காட்சியைச் சுட்டிக் காட்டினர். இராமானுசரும் அக்காட்சியைக் கண்டு வியந்து, அவர்களைத் தம்மிடம் அழைத்து வருமாறு தம் சீடர்களில் ஒருவரிடம் கூறினார்.

வில்லி தம்பதிகளும் இராமானுசருக்கு அருகே வந்து, கை கூப்பி நின்றனர். இராமானுசரும் அவர்களை நோக்கி, 'உங்கள் ஊர் எது? நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவ்வில்லி 'நாங்கள் வசிப்பது திருவெள்ளறை. உறையூரில் அகளங்கசோழனிடம் வேலை பார்க்கிறேன்' என்று கூறினான். 'வசந்த விழாக் காண வேண்டு மென்று என் மனைவி விரும்பினாள். காணச் செல்கின்றோம்' என்றான்.

இராமானுசர் புன்முறுவலோடு 'வில்லியே! நீ இப்படி யாவரும் அறியும்படியாக உன் மனைவிக்கு நடை பாவாடை போடுகிறாயே! பார்ப்பவர்கள் பெண்டாட்டிக்கு நீ அடிமை செய்வதை இகழ்வார்களே! இதைப்பற்றி நீ கவலைப்படவே இல்லையா?' என்று கேட்டார். வில்லியோ, 'சுவாமி இதில் என்ன தவறு? இந்த அழகுத் தெய்வத்தை நான் மனைவியாகப் பெற்றிருக்கிறேன்! இப்பூங்கொடி வாடலாமா? தாங்களே சொல்லுங்கள்' என்று சொன்னான். அவ்வில்லியின் உரையைக் கேட்ட சீடர்கள் சிரித்தனர். இராமானுசரோ அவர்களை அடக்கி, 'நீங்கள் ஏன் சிரிக்கின்றீர்கள். இவ்வளவு பெரிய வலிமை வாய்ந்தவனையும் காதல் அடிமைப்படுத்தியிருக்கிறது. உலகை மறந்து மனைவிக்குப் பணி செய்ய, இவன் வெட்கப்படவில்லை. அதுபோலவே நீங்கள் திருவரங்கன்மீது பக்தி செய்யுங்கால் உங்களைமறந்து–உலகை மறந்து ஈடுபடுவீர்களேயானால் பெறற்கரிய பேற்றை அடையலாம்' என்று கூறினார். பிறகு வில்லியை நோக்கி 'இவர்கள் உன்னைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்கள். நீ வருந்தாதே' என்றார். இவ்விதம் இராமானுசர் தமக்காக ஆறுதல் கூறியதால் அவ்வில்லியின் மனம் மாறலாயிற்று. மறுபடியும் தன் மனைவியைப் பார்த்தான். அவளுடைய கருவிழியில் ஈடுபட்ட அவன், இராமானுசரை நோக்கி, 'பெரியீர் இவள் கண்ணழகை நான் எப்படிப் பாராட்டாமலிருக்க முடியும்? இவளை விடக் கண்ணழகில் யாரேனும் சிறந்து விளங்குகிறார்களா? தாங்களே சொல்லுங்கள்' என்றான். இராமானுசரும் 'ஆம். கண்ணழகு மிகவும் வசீகரிக்கக் கூடியதுதான்! ஆனாலும் இதனினும் மேலான கண்ணழகைக் காட்டுகிறேன் மடத்திற்கு வருகிறாயா?, என்றார். உடனே வில்லியும் 'என் பொன்னாச்சியை உறவினர் வீட்டில் விட்டுவிட்டுத் தங்களை மடத்தில் சந்திக்கிறேன்' என்று சொல்லிப் புறப்பட்டான். இராமானுசரோ தம்முடைய குழுவினருள் மேலும் ஓர் அருமையான பக்தரைச் சேர்க்கப் போகிறோம் என்ற நம்பிக்கையோடு மடத்துக்கு வந்து சேர்ந்தார். சிறிது நேரத்தில் தான் சொன்னபடியே அவ்வில்லி

யும் வந்து இராமாநுசரைச் சரண் அடைந்தான். இராமாநுசரும் அவனை அழைத்துக் கொண்டுபோய் திருவரங்கப்பெருமாளைச் சுட்டிக் காட்டினார். 'இவ்வமுதினை நன்றாகப் பருகும்' என்றார். திருவடிமுதல் திருமுடிவரை ஒவ்வொரு அவயவமாக அனுபவிக்கும்படி அந்தந்த அவயவங்களின் அழகை வருணித்துக் கூறினார். எம்பெருமானின் கருணைபொழியும் திருக்கண்களைச் சுட்டிக் காட்டினார். "குழலழகர், வாயழகர், கண்ணழகர்'' என்றெல்லாம் ஆண்டாள் பாடிய பாசுரங்களால் விளக்கினார். "பவளவாய் கமலச் செங்கண்" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் வருணனையையும் நினைவூட்டினார். 'இக்கண்ணழகிலும் மேலான கண்ணழகு மூவுலகிலும் உண்டோ?' என்று வில்லியைக் கேட்டார். தன் மனைவியின் கண்ணழகிலேயே ஈடுபட்டு வந்த வில்லிக்கு அரங்கன் அருள் கிட்டிவிட்டது. அவ்வரங்கன், தன் அமுதமன்ன திருக்கண்களாலே அருள்பாலித்துவிட்டான். உடனே, 'என்ன அழகு என்ன அழகு' என்று அப்படியே வாரி விழுங்கி விட்டான். அப்பெருமானின் பேரழகினைத் தன் உள்ளத்தில் அப்படியே தேக்கிக் கொண்டான்.

இப்படிப்பட்ட பேரழகைத் தமக்குக் காட்டித் தம்மை ஆட்கொண்ட இராமாநுசரின் திருவடிகளில் வீழ்ந்து தண்டனிட்டான். வேகமாகச் சென்று தன் மனைவியையும் அழைத்து வந்து அடிபணியச் செய்தான். 'இனி நாங்கள் உமதடிமை. எங்களை ஆட்கொள்ளவேண்டும்' என்று வேண்டினான். இராமாநுசரும் அவ்வில்லி தம்பதிகளுக்கு சங்கு சக்கரப் பொறியை அருளி, திருமண் காப்பிட்டு, பிள்ளை உறங்காவில்லிதாசர் என்ற தாசியநாமத்தையும் அளித்து மற்றவர்களிடம் இனி "இவர் நம்பெருமாளின் காதலர்'' என்று அறிமுகப்படுத்தினார். இவ்விதம் இராமாநுசரால் திருத்தப்பட்ட வில்லி தம்பதிகள் உறையூருக்குச் சென்று அரண்மனை வேலைகளை மட்டும் கவனித்து விட்டு மற்றைய பொழுதெல்லாம் இராமாநுசருக்கும், மற்ற திருமால் தொண்டர்க்கும் பணி செய்வதிலே காலம் கழித்தனர். மேலும் பிள்ளை உறங்காவில்லி தனக்குக் கிடைத்த ஊதியத்தை அப்படியே தமது குருவான இராமாநுசருக்கே மடத்துப்பணிகளுக்கே அளித்து வந்தான். இச்செயல் அகளங்க சோழனுக்குத் தெரிந்தது. வில்லியின் மனமாற்றத்தையும் தொண்டின் மேன்மையையும் அறிந்தான். இப்படிப்பட்ட தொண்டர்களை நாம் நமக்காகப் பயன்படுத்துவது தவறு. என்று கருதினான். உடனே அவ்வில்லிதாசரை வரவழைத்து, 'இதுவரை நீங்கள் செய்த பணி போதும். இனிமேல் நீங்கள் எந்த வேலையையும் செய்யாமலேயே ஊதியம் பெறத்தக்கவராவீர்' என்று கூறிவிட்டான். அவ்வில்லிக்குச் சம்பளம் என்று இராமல் சன்மானம் என்று திங்கள்தோறும் கொடுத்து வந்தான். பிள்ளையுறங்கா வில்லியும் அந்தச் சன்மானத்தை இராமாநுசர் திருவடிகளிலே வைத்து வணங்கி வந்தார். ஆனால் வில்லிதாசருக்குச் சன்மானமாகத்தான் அரண்மனையிலிருந்து பொருள் வருகிறது சம்பளமாக அல்ல என்ற செய்தி இராமாநுசருக்குத் தெரிந்தது. ஒருவிதப் பணியும் செய்யாமல் வருகின்ற ஊதியத்தைப் பெறுவதிலே, இராமாநுசருக்கு விருப்பம் இல்லை. ஆதலால் அவ்வில்லியரின் பொருளை வாங்க மறுத்தார். அவர்களையும் கூப்பிட்டு 'நீங்கள் பணி புரியாமல் அரசனிடமிருந்து பொருள் பெறுவதும் தவறல்லவா? அதை அவ்வரசனிடமே திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அது நமக்கு உதவாது' என்று பணித்தார்.

(தொடரும்)

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

7. சந்தான குரவர்–அருணூல்களும் அரும்பொருளும் (தொடர்ச்சி)

3. இருபா இருபஃது

அருணந்தி சிவாசாரியார் இயற்றிய மற்ருெரு நூல் 'இருபா இருபஃது' ஆகும். பத்து நேரிசை வெண்பாக்களும், பத்து நேரிசை ஆசிரியப்பாக்களும் ஆக இருபது செய்யுட்களை உடையது இவ்வினிய நூல்; அந்தாதித் தொடையில் அமைந்தது. தம் ஞான ஆசிரியராகிய மெய்கண்ட தேவரை வினவு முகத்தால் சித்தாந்த சைவச் செழும் பொருளை விளக்கும் நூல் இது.

"கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்-வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்ருெருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்."

என்னுந் திருப்பாட்டு முதலாக இந்நூல் இனிது விளக்கும் உண்மைகள் மிகப்பல. தம்மாசிரியர்மாட்டுத் தாம் வைத்துள்ள அன்பின் உறுதியினை இதனுள் ஆங்காங்குப் புலப்படுத்துகின்ருர் ஆசிரியர்.

திருமுறை வாக்குகளில் அழுந்திய ஆசிரியரது கூர்த்த மதி பல இடங்களில் தெளிவாகின்றது.

"இருநிலம் தீநீர் இயமானன் கால் எனும்
பெருநிலைத் தாண்டவம்"

"காண்பார் யார்கொல் காட்டாக்கால் எனும்
மாண்புரை"

என்னுமிடங்கள் அப்பர் தேவாரத்தில் உயர்நிலை எனத்தக்க ஈரிடங்களைச் சுட்டுகின்றன.

4. உமாபதியார் அருணூல்கள்

உமாபதி சிவாசாரியார் அருளிய சித்தாந்த சாத்திர நூல்கள் எட்டு: திருவருட்பயன், வினவெண்பா, போற்றிப்பஃருெடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், சிவப்பிரகாசம் என்பன அவை.

திருவருட்பயன்

இவற்றுள் திருவருட்பயன் பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலிநிலை, அருளது நிலை, அருளுருநிலை, அறியும்நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை ஆகிய பத்துப் பகுதிகளை உடையது. நூறு குறட்பாக்களை உடையது. பதிமுதுநிலை இறைவன் பழைமையை எடுத்து விளக்குகின்றது. "அகர உயிர்போல்" என்று திருக்குறள் உவமையையே எடுத்துக் காட்டித்

தொடங்குகின்றது. ஆணவப் பிணிப்புடைய உயிர்களுக்குத் தம்மை அறிவிக்கும் முதல்வன் ஞானமானது தோன்ருமல் மறைந்திருப்பதற்குப் பகலிற் கண் விளங்கப் பெருத கோட்டானுக்குக் கதிரவன் ஒளியும் மிகுந்த இருளாயிருக்கின்றமையை உவமை கூறும்: "ஊமன் கண் போல ஒளியும் மிக இருளே" என்று.

உயிர்கள் அருளைப் பொருந்திப் பேரின்பம் அடைதற்கு மாருக மயக்கமாகிய கடலுள் அழுந்துதல், பாற்கடலில் உள்ள மீன்கள் பாலைப் பருகாது அதன்கண் உள்ள வேறு இழிந்த பொருளைத் தின்னுதல் போலும் என்பார்:

"பால்ஆழி மீன் ஆளும் பான்மைத்து."

"பாற்குடத்தின் மேலுள்ள பூனை பாலைக் குடிக்கக் கருதாமல் அதன் மேல் ஓடும் கரப்பான் பூச்சியைப் பிடித்துத் தின்ன முயலுவது போல" என்றும் பேசுவர்.

இறைவனை "எடுத்துச் சுமப்பான்" என்ற அரிய தொடரால் எடுத்துப்பேசும் இனிய பகுதி நினைந்து நினைந்து இன்புறற்பாலதாகும். உயிர்கள்மாட்டுக் கருணை பெரிதும் உடைய முதல்வன் அனைவர்க்கும் அருள் சுரக்கக் காத்திருக்கும் அந்தண்மை உடையான் என்பதனை விளக்க 'எடுத்துச் சுமப்பான்' என்னும் அரிய தொடர் ஒன்றே போதும் அன்ருே?

விஞவெண்பா

விஞவெண்பா பதின்மூன்று நேரிசை வெண்பாக்களை உடையது. சித்தாந்தக் கருத்துக்கள் நன்கு விளங்கும்படித் தம் ஞான ஆசிரியர் ஆகிய மறைஞானசம்பந்தரை வினவுவது போன்று அமைந்த நேரிசை வெண்பாக்கள் இவை.

விரிந்த ஒளியும் நிறைந்த இருளும் ஒரே இடத்திற் பொருந்துதல் அரிது; 'நிறைந்த இருளுடைய கொடியேன்பால் விரிந்த ஒளியை உடைய திருமருதூர்ச் சம்பந்தா! நீ எவ்வாறு பொருந்தி நின்ருய்' என்று முதலிலேயே வினவுகின்ற திறம் நெஞ்சுள் நின்று இன்பம் தருகின்றது.

"நீடும் ஒளியும் நிறையிருளும் ஓரிடத்துக்
கூடல் அரிது கொடுவினையேன்—பாடிதன்முன்
ஒன்றவார் சோலை உயர்மருதச் சம்பந்தா!
நின்றவா றெவ்வாறு நீ"

காண்பான், காட்டுவான், காணப்படும் பொருள் ஆகிய மூவகை நினைவும் நீங்கி மெய்ப்பொருளைத் தம்முடைய அநுபவத்தில் அத்துவிதமாகக் காண்பார்கள் நன்முத்தி எய்துவார்கள். தண்கடந்தைச் சம்பந்த மாமுனிவன் பாசத்தை மெலிவிக்கும் நன்னெறியிலே வாராதவர்கள் இம்மூவகைப் பொருளியல்பினைக் காணுதவர்கள் ஆவர் என்று அழகுறத் தெளிவுறுத்தும் அருங்கவிதை உள்ளத்துக்கொண்டு என்றென்றும் ஓர்தற்குரியது

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணுர்கள்—காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டும்நெறி வாரா தவர்."

போற்றிப்பஃறெடை

போற்றிப்பஃறெடை நூற்றுத் தொண்ணூறு வரிகளை உடைய ஒரு கலிவெண்பா ஆகும். தம் ஞானகுரவராகிய மறைஞானசம்பந்தர் தம்மை ஆட்கொண்டருளிய பேரருளினையும், உணர்த்திய அருள் மொழிகளையும், பிற அருஞ்செயல்களையும் எண்ணி எண்ணி இதயம் கனிகின்றார் இந்நூலுள். அக்குரவரை வழிபட்டுப் பல சித்தாந்த சைவ உண்மைகளை எடுத்துரைக்கின்றார்.

ஒவ்வோர் அருஞ்செயலையும் எடுத்துரைத்துப் போற்றுவதனால் இந்நூல் இப்பெயர் பெற்றுள்ளது. இந்நூலின் இறுதியில் உள்ள வெண்பா இது.

"போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணியநூல்—போற்றி [எங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேரறுவந் துண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் றாள்"

இவ்வெண்பாவின் இரண்டாம் அடியிற் குறிக்கப்பெறுவது கொண்டு 'மறைஞானசம்பந்தர் அருளிய நூல் உண்டு' என்று கொள்ளலாம்; ஆனால் இஞ்ஞான்று ஒன்றும் அவர் இயற்றியருளியதாகக் கிடைக்க வில்லை.

"இறவாத இன்பத் தெமையிருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து—நறவாரும்
தாருலா வும்புயத்துச் சம்பந்த நாதனென்று
பேரிலா நாதனொரு பேர்புனைந்து—பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம்போற்றி"

என்ற வரிகள் உருகி உருகிப் பாடப்பெறும் தன்மை உடையவை.

கொடிக்கவி

கொடிக்கவி ஒரு கட்டளைக் கலித்துறையையும் மூன்று நேரிசை வெண்பாக்களையும் தன்னகத்துக் கொண்டது. தில்லையில் உமாபதி தேவநாயனார் வாராது தில்லை வாழந்தணர்கள் கொடியேற்ற முயன்ற போது, கொடி ஏறாமல் நின்றுவிட, உமாபதியார் வந்து இக்கொடிக்கவி பாடிடக் கொடி ஏறிற்று என்பது வரலாற்றிற் கண்டது.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேஇடம் ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள்அடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிரருள் கூடும்படிகொடி கட்டினனே"

திருவைந்தெழுத்தின் பல நிலைகளை இக்கொடிக்கவியின் நான்காவது பாட்டு விளக்குகின்றது. சிவாயநம என்ற திருவைந்தெழுத்து; ஓம் ஆம் ஔம் சிவாயநம என்ற எட்டெழுத்து; ஓம் நமசிவாய என்ற ஆறெழுத்து; ஓம் சிவாய என்ற நாலெழுத்து; பிஞ்செழுத்து என்னும் சக்தி எழுத்தாகிய வகார எழுத்து; அதற்கு முற்பட்ட பெரு எழுத்தாகிய

சிகார எழுத்து; உள்ளத்திற் பதிவித்தபோது பேசும் எழுத்தாகிய அருட்சத்தி; பேசாத எழுத்தின் பொருள் ஆகிய சிவத்தினை விரைவில் தெளிவாகக் காட்டுவதனையே கொடி குறிக்கும். இப்பெரும்பொருளைக் காட்டும் திருப்பாட்டு இது:

“ அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.”

நெஞ்சுவிடு தூது

நெஞ்சுவிடுதூது தம் ஞானகுரவராகிய மறைஞான சம்பந்தர்பால் நெஞ்சைத் தூதுவிடுக்கும் முறையில் அமைந்தது. 258 அடிகளில் அமைந்த ஒரு கலிவெண்பா இந்நூல். பாட்டுடைத் தலைவராகிய தம் ஆசிரியரைப் பலவாறு புகழ்ந்து போற்றுகின்றார் உமாபதியார். உயிரியல்பு, பாச இயல்பு, பதி இயல்பு ஆகியவற்றை முதற்கண் விளக்குகின்றார். அதன்பிறகு பத்துறுப்புக்களை விளக்கத் தொடங்குகின்றார். ‘குணக்குன்றேன்,’ ‘தான்அந்தம் இல்லாத தண்ணளியால் ஓங்கிவரும் ஆனந்தம் என்பதோர் ஆறுடையான்,’ ‘நண்ண அரியதொரு நாடுடையான்,’ ‘தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால், ஒட்டற்று வீற்றிருக்கும் ஊர் உடையான்,’ ‘அருள் மேலாய் விலங்கு அலங்கல் மெய்யினன்,’ ‘எண்ணுவார் எண்ணத்து நில்லாமல் நிற்கும் நீள் வாசியான்,’ ‘திகழ்ஞான ஆனையான்,’ ‘இருமுச்சமயம் கடந்து தனக்கு ஒப்பிலாது சுமைதுன்பம் நீக்கும் துவசன்,’ ‘என்றும் ஒரு தகைமையாயிருக்கும் இன்பருளே, நின்று முழங்கும் முரசான்,’ ‘அப்பாலும் எப்பாலும் மேலை உலகும் உலகால் உணர ஒண்ணு ஊரும், இலகி நடக்கும் எழில் ஆணையான்’ என்று பத்துறுப்புக்கள் மிக்க எழிலுறக் கூறப்பெற்றுள்ளன.

“ தந்தெம்மை ஆண்டருளும் சம்பந்த மாமுனிவன்
அந்தம்கடந்தப்பாலாய் நின்றேன்—எந்தைபிரான் ”

என்றும்,

“ வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி—அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாம்அகல
நெஞ்சமே வாராய் நினைந்து ”

என்றும்,

“ குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான்—கருவேடம்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்
எட்டுமவர்க் கெட்டா இயல்பினன் ”

என்றும் தம் ஞான ஆசிரியரை உள்ளமுருகப் போற்றிடும் பகுதிகள் கற்பார் நெஞ்சைக் கரைக்குந் தகைமையன.

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன் இராமசேஷன்

(சென்ற இதழ் 208–ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூல்

பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும்
பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலைதோறும்
காலாறு கோலியிசை பாடநீடு
களிமயினின் ருடுமியற் ரெண்டைநாட்டுண்
ணலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்ட
நன்றிபுனை குன்றைவள நாட்டுமிக்க
சேலாறு கின்றவயற் குன்றத்தூரிற்
சேக்கிழார் திருமரபு சிறந்ததன்றே. 11.

(இ-ள்): பாலாறு வளஞ்சுரந்து நல்க-பாலாருனது நீர்வளத்தைப் பெருக்கிக் கொடுக்க அதனல்; மல்கும் பாளை விரி மணங்கமழ் பூஞ்சோலைதோறும்-விருத்தியடையும் கமுகம்பாளைகள் விரிந்து வாசனை பரிமளிக்கா நின்ற மலர்ச்சோலைகள்தோறும்; காலாறு கோலியிசைபாட-வண்டுகள் சூழ்ந்து இசைபாட; நீடுகளிமயினின்ருடு மியற்ரெண்டை நாட்டுள்-மிக்கமயில்கள் களிப்புடனே ஆடும்படியான தொண்டை நாட்டில்; நாலாறு கோட்டத்துப் புலியூர்க்கோட்டம்-இருபத்து நான்கு கோட்டத்துளொன்ருகிய புலியூர்க் கோட்டத்தில்; நன்றிபுனை குன்றைவளநாட்டு-நன்மை மிகுந்த எழுபத்தொன்பது நாடுகளுள் ஒன்ருகிய குன்றைவள நாட்டின்கண்; மிக்கசேலாறுகின்ற வயற் குன்றத்தூரில்-எண்ணிறந்த சேற்கெண்டைகள் இளைப்பாறுகின்ற வயலினையுடைய குன்றத்தூரில்; சேக்கிழார் திருமரபு சிறந்தது-சேக்கிழார் நாயனரது மரபு சிறப்புற்று விளங்கியுள்ளது. (எ-று). அன்று ஏ–அசை.

நாடெங்குஞ் சோழன்முனந் தெரிந்தேயேற்று
நாற்குடிநாற் பத்தெண்ணு யிரத்துவந்த
கூடல்கிழான் புரிசைகிழான் குலவுசீர்வெண்
குளப்பாக்கி ழான்வரிசைக் குளத்துழான்முன்
றேடுபுக ழாரிவருஞ் சிறந்து வாழச்
சேக்கிழார் குடியிலிந்தத் தேசமுய்யப்
பாடல்புரி யருண்மொழித்தே வரும்பினந்தம்
பாலரு வாயரும்வந் துதித்துவாழ்ந்தார். 12

(இ-ள்) : நாடெங்குஞ் சோழன் முனந் தெரிந்தேற்றும்-தொண்டைநாடு முழுதும் கரிகாற்சோழன் முற்காலத்தில் தன்நாடு முதலிய நாடுகளினின்றுந் தெரிந்தெடுத்துக் குடியேற்றிய; நற்குடி நாற்பத் தெண்ணுயிரத்து வந்த-நல்ல குடிகளாகிய நாற்பத்தெண்ணுயிரங் குடிகளுள் வந்த; கூடல்கிழான் புரிசைகிழான்-கூடல்கிழானென்றும் புரிசை கிழானென்றும்; குலவுசீர் வெண்குளப்பாக்கிழான் வரிசைக் குளத்துழான்-விளங்கிய சிறப்புள்ள வெண்குளப்பாக்கிழானென்றும் மேன்மை தங்கிய குளத்துழானென்றும்; முன்றேடு புகழாரிவருஞ் சிறந்துவாழ-தொன்று தொட்ட புகழ் சம்பாதித்தவர்களாகிய இவர் களும் சிறப்புற்றுவாழ; சேக்கிழார் குடியிலிந்தத் தேசமுய்ய-சேக்கிழார் குடியில் இவ்வுலகத்தார் கடத்தேறும்படி; பாடல் புரியருண்மொழித் தேவரும்-பெரிய புராணத்தை யோதியருளிய அருண்மொழித் தேவரும்; பினந்தம்பாலருவாயரும் வந்துதித்து வாழ்ந்தார்-பின்பு அவர் தம்பியாகிய பாலருவாயரும் திருவவதாரஞ் செய்து வாழ்ந்திருந் தனர். (எ-று). ஏ-அசை.

பசுங்குடி பன்னீராயிரத்தினும் நற்குடி சிறந்தமையின் நற்குடி நாற்பத்தெண்ணுயிரத்துள் என்ருரென்க. பின்னம் என்றது பினம் என விகாரமாயிற்று.

இமயமலே யரையன்மக டழுவக்கச்சி
யேகம்பர் திருமேனி குழைத்த ஞான்று
சமயமவை யாறினுக்குந் தலேவிக்கீசர்
தந்தபடி யெட்டுழக்கீ ராழிநெல்லு
முமைதிருச்சூ டகக்கையாற் கொடுக்க வாங்கி
யுழவுதொழி லாற்பெருக்கி யுலகமெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண்
டலேவர்பெரும் புகழுலகிற் றழைத்ததன்றே. 13

(இ-ள்) இமயமலேயரையன் மகடழுவ-மலேயரையன் புத்திரியாகிய உமா தேவியார் தழுவ; கச்சியேகம்பர் திருமேனி குழைந்த ஞான்று-காஞ்சி நகரத்திலெழுந்தருளிய ஏகாம்பரநாதர் திருமேனி குழைந்த அக் காலத்தில்; சமயமவையாறினுக்குந் தலேவிக்கு-சமயங்களாறினுக்குந் தலேவியாகிய உமாதேவியார்க்கு; ஈசர்தந்த படியெட்டுழக்கீராழி நெல்லும்-சிவபிரான் கொடுத்தருளிய நிமந்தமாகிய எட்டுழக்குக் கொண்ட ஈராழி நெல்லினேயும்; உமை திருச்சூடகக்கையாற் கொடுக்க வாங்கி-உமாதேவியார் வளேயலணிந்த தமது திருக்கையாற் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு; உழவு தொழிலாற் பெருக்கி-உழவு தொழிலாலதை விருத்தி செய்து; உலகமெல்லாந் தமது கொழுமிகுதி கொடுவளர்க்கும்-இவ்வுலகத்தையெல்லாந் தம்முடைய ஏர்வளத்தின் மிகுதியினுல் வளர்க்காநின்ற; வேளாண்டலேவர் பெரும்புகழுல கிற்றழைத்தது-வேளாளர்களின் பெரிய புகழானது இவ்வுலகத்திற் சிறப்புற்று நின்றது. (எ-று). அன்று ஏ-அசை

ஏர்வளத்தின் மிகுதியினுல் வளர்த்தல்-நெல் முதலிய தானியங்களில் எஞ்சியவற்ருல் விருத்தியடையச் செய்தல். அதாவது தன் பங்கு நீக்கிய மிகுதியால் பிறரைப் பாதுகாத்தல்.

விளைகழனி பூலோக முழுதுமேரி
    விரிதிரை நீர்க் கடல்வருணன் கம்புகட்டி
கிளர்கலப்பை தருசுமையாள் சுவேதராமன்
    கிடாமறலி வசத்தீசன் வசத்தானென் றிங்
களவறிந்தாண் டாண்டுதொறும் விதைதப்பாம
    லளக்குமவள் கச்சியறம்வளர்த்தமாதா
வொளிபெருகு கொழுமிகுதி யெறும்பீருன
    வுயிரனைத்துந் தேவருமுண் டுவப்பதன்றே. 14

(இ-ள்) : பூலோக முழுதும் விளைகழனி-பூலோக முழுதும் விளை நிலமாகவும்; விரிதிரை நீர்க்கடல் ஏரி-விரிந்த அலையையுடைய நீர் நிறைந்த கடல் ஏரியாகவும்; வருணன்கம் புகட்டி-வருணராசன் மடைமாறுகின்றவனுகவும்; கிளர் கலப்பைதரு-பிரகாசியாநின்ற கலப்பையானது கற்பக தருவாகவும்; சுமையாள் சுவேதராமன்-பலபத்திரராமன் கலப்பை சுமக்கும் ஆளாகவும்; கிடாமறலி வசத்து-எருமைக்கடா எமனிடதும்; ஈசன் வசத்தானென்று-இடபம் சிவனிடத்துமாக என்று; இங்கள வறிந்தாண்டாண்டு தொறும்-இவ்விடத்துப் பிரமாணமறிந்து வருடந்தோறும்; விதை தப்பாமலளக்குமவள்-விதைகள் தப்பாமல் அளக்காநின்ற அம்மை; கச்சியறம் வளர்த்தமாதா-காஞ்சிநகரத்தில் முப்பத்திரண்டறங்களையும் வளர்த்த உமாதேவியார்; ஒளிபெருகு கொழு மிகுதி-இவ்வாறு புகழ்பெருகுகின்ற கொழுவாலாகிய தானியமிகுதியை; எறும்பீருனவுயிரனைத்தும்-மனிதர்முதல் எறும்பீருய எல்லாவுயிர்களும்; தேவருமுண்டுவப்பது-தேவர்களும் உண்டு மகிழ்ச்சியடைவது. (எ-று). மிகுதி-எஞ்சியது.

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த
    வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத்தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
    குழியிலெழு பதுபேரு முழுகிக்கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டப்ப
    ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின்கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
    பிறித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ. 15

(இ-ள்): மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்-வஞ்சனையைக் கருதிக் கொண்டு *பழையனூர் நீலியென்னும் பேய்மகள் செய்த மாறுபாட்டினுல்; வணிகனுயிரிழப்ப-ஒரு செட்டியானவன் உயிரிழந்துவிட அதைக் கண்டு; தாங்கள் கூறிய சொல் பிழையாது துணிந்து-தாங்கள் முன்சொல்லிய வாய்மை தப்பாமல் துணிவு கொண்டு; செந்தீக்குழியிலெழுபதுபேரு முழுகி-செந்நிறமாகிய தீக்குழியில் எழுபது பேரும் முழுகி; கங்கையாறணி செஞ்சடைத் திருவாலங்காட்டப்பர்-கங்காநதியைத் தரித்த சிவந்த சடாபாரத்தையுடைய திருவாலங்காட்டிலெழுந்தருளிய சிவபிரானது; அண்டமுற நிமிர்ந்தாடு மடியின்கீழ்-ஆகாய முகட்டினை அளாவும்படி நிமிர்ந்து நடனஞ் செய்கின்ற திருவடியின்கீழ்ச் சேர்ந்து; மெய்ப்பேறு பெறும் வேளாளர் பெருமை-உண்மையான பேறுபெற்ற வேளாளர்களுடைய பெருமையானது; எம்மாற் பிரித்தளவிட்டிவளவெனப் பேசலாமோ-எம்மால் தனித்து அளவுபடுத்தி இவ்வளவினதென்று கூறப்படுமோ? (எ-று).

---

* நீலியென்னும் பேய்மகள் சரிதம் திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணம் 3வது திருவிருத்த உரையில் காண்க,

காராள ரணிவயலி லுழுதுதங்கள்
கையார நட்டமுடி திருந்திலிந்தப்
பாராளுந் திறலரசர் கவித்தவெற்றிப்
பசும்பொன்மணி முடிதிருந்துங் கலப்பை பூண்ட
வேராலெண் டிசைவளர்க்கும் புகழ்வேளாள
ரேரடிக்குஞ் சிறுகோலாற் றரணியாளச்
சீராரு முடியரச ரிருந்து செங்கோல்
செலுத்துவர்வே ளாளர்புகழ் செப்பலாமோ. 16

(இ-ள்): காராளரணி வயலிலுழுது-வேளாளர்கள் செழுமையுள்ள வயலிலுழுது; தங்கள் கையார நட்டமுடி திருந்தில்-தங்கள் கையால் நிரம்ப நட்ட நாற்று முடிகளானவை செப்பமாக விளையுமானால்; இந்தப் பாராளுந் திறலரசர் கவித்த-இவ்வுலகத்தையாள வல்ல அரசர்கள் தரித்த; வெற்றிப் பசும்பொன் மணிமுடி திருந்தும்-வெற்றியினை யுடைய மாற்றுயர்ந்த பொன்னாலாகிய மணிகள் பதித்த முடியானது செப்பமாக இருக்கும்; கலப்பை பூண்ட ஏராலெண்டிசை வளர்க்கும் புகழ் வேளாளர்-கலப்பை பூண்ட ஏரால் எட்டுத்திக்கினும் புகழை வளர்க்கும் வேளாளர்; ஏரடிக்குஞ் சிறுகோலால் தரணியாள-உழவுக் குண்டைகளை அடித்து ஓட்டுகின்ற சிறியதாற்றுக் கோலால் இவ்வுலகத்தை யாள; சீரால் முடியரசரிருந்து-சிறப்புள்ள மகுட வர்த்தனர்கள் வீற்றிருந்து; செங்கோல் செலுத்துவர்-செங்கோல் செலுத்துவார்கள் (ஆகையால்;) வேளாளர் புகழ் செப்பலாமோ-அவ் வேளாளரது புகழை இவ்வளவென்று வரையறுத்துச் சொல்ல முடியுமோ. (எ-று).

அரசர் முடி திருந்துதற்கு நாற்றுமுடி திருந்துதலேதுவாதலில் நட்டமுடி திருந்திலென்றார்.

வாயிலார் சத்தியார் விறல்சேர் மிண்டர்
வாக்கரையர் சாக்கியர் கோட்புலி கஞ்சாறர்
ஏயர்கோன் கலிக்காமர் முளைவித்தாக்கு
மிளையான்றன் குடிமாறர் மூர்க்கர் செங்கைத்
தாயனார் செருத்துணையார் செருவில் வெம்போர்
சாதித்த முனையடுவா ராகநம்பி
பாயிரஞ் சேரறுபதுபேர் தனிப்பேர்தம்மிற்
பதின்மூவர் வேளாளர் பகருங்காலே. 17

(இ-ள்): வாயிலார் சத்தியார் விறல் சேர்மிண்டர்-வாயிலார் நாயனார் சத்தி நாயனார் விறன்மிண்ட நாயனார்; வாக்கரையர் சாக்கியர் கோட் புலி கஞ்சாறர்-திருநாவுக்கரசு சுவாமிகள் சாக்கிய நாயனார் கோட்புலி நாயனார் மானக்கஞ்சாற நாயனார்; ஏயர்கோன் கலிக்காமர்-ஏயர்கோன் கலிக்காம நாயனார்; முளைவித்தாக்கு மிளையான் குடிமாறர்-முளைத்த வித்தினை அரிசியாக்கி அமுது சமைத்த இளையான் குடிமாற நாயனார்; மூர்க்கர் செங்கைத் தாயனார் செருத்துணையார்-மூர்க்கநாயனார் செவ்வி தான கையையுடைய அரிவாட்டாய நாயனார் செருத்துணை நாயனார்; செருவில் வெம்போர் சாதித்த முனையடுவாராக-போர் முனையில் கொடிய போரை வெற்றி கொண்ட முனையடுவார் நாயனாரும் என்னும்; நம்பி பாயிரஞ் சேரறுபது பேர்தனிப் பேர்தம்மில்-சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையிலுள்ள அறுபது தனியடியார் களுக்குள்; பதின்மூவர் வேளாளர் பகருங்கால்-சொல்லுமிடத்து வேளாளர் பதின்மூன்று பேராம். (எ-று). ஏ-அசை.

(தொடரும்)



அறிவாராய்ச்சியியலில் உள்ளுணர்வுக் கொள்கை

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.,]

முன்னுரை :

அறிவாராய்ச்சியியலில் சிறப்பிடம் பெற்ற கொள்கைகள் மூன்று. அவை ஆதிக்கக் கொள்கை, ஐயக்கொள்கை, உள்ளுணர்வுக் கொள்கை என்பன. ஆதிக்கக் கொள்கை, ஐயக்கொள்கை ஆகியவை முன்னுள்ள கட்டுரைகளில் ஆராயப்பெற்றன. எஞ்சியுள்ள உள்ளுணர்வுக் கொள்கையின் சிறப்பினை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உள்ளுணர்வுக் கொள்கை :

அறிவாராய்ச்சியியலில் ஆராய்ச்சிக்குரியதாக வருகிற உள்ளுணர்வுக் கொள்கையை Intuition என ஆங்கிலத்தில் வழங்குவர்.

அகக்காட்சி அல்லது உள்ளுணர்வு என்ற ஒன்றே நமக்கு அறிவை நேர்முகமாக வழங்கும் வாயில் என்பது உள்ளுணர்வுக் கொள்கையினர் பொதுவாக எடுத்துக் கூறும் செய்தி.

அறிவை வழங்கும் வாயில்கள் :

ஒருவன் தனக்குப் புறத்தேயுள்ள பொருள்களைப் பற்றிய அறிவைப் பெறுவதற்குரிய வழிகள் பலவாகக் கூறப்பெறுகின்றன. ஆயினும் முக்கியமான வழிகள் மூன்று.

காட்சியளவை என்பது முதலாவதாக அமைவது. நம் எதிரில் உள்ள பொருள்களை நாம் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். இங்கே கண்ணானது நாம் அறிவைப் பெறுவதற்குரிய வழியாக விளங்குகின்றது. இவ்வாறே மெய், வாய், மூக்கு, காது ஆகியவை மூலமாகவும் அறிவைப் பெறுகிறோம். இங்கே கூறப்பெற்ற வழிகள் ஐந்தாக இருப்பினும் [மெய், வாய், கண், மூக்கு, செவி] 'காட்சி' என்ற ஒரே சொல்லைப் பொதுவாகப் பயன்படுத்தி, நாம் அறிவைப் பெறுவதற்குரிய வாயில்களில் 'காட்சியளவை' ஒன்று என்பர்.

கருதல் அளவை என்பது இரண்டாவது. சில கருத்துக்களை இணைத்துச் சிந்திக்கும்போது ஒரு புதிய கருத்து உண்டாகிறது. இதனை அனுமானம் என வழங்குவர்.

உரையளவை என்பது மூன்ருவது. ஆன்ரோர் வாக்குக்கள் மூலமாகவும் நூல்கள் வாயிலாகவும் அறிவைப் பெறலாம். இத்தகைய வழியை ஆகம அளவை, உரையளவை, ஆப்த வசனம் எனக் கொள்வர்.

இவ்வாறு காட்சி, கருதல், ஆகமம் போன்ற வாயில்களால் நாம் பெறுகின்ற அறிவானது உண்மையான அறிவு அன்று என்று மறுத்துக் கூறுகிறது உள்ளுணர்வுக் கொள்கை.

ஓடும் புகைவண்டியில் அமர்ந்து வெளியில் பார்க்கிருன் ஒருவன். அவன் கண்களுக்கு எதிரே உள்ள மரங்கள் ஓடுவனவாகத் தெரிகின்றன.

கண்ணுடிப் பாத்திரம் ஒன்று; நீர் நிறைந்திருக்கிறது. உள்ளே நேரான ஒரு குச்சியைச் செருகுகிருேம். தண்ணீரின் உட்பகுதியில் உள்ள குச்சி வளைவாக இருப்பதைக் காணலாம். குச்சி நேராக இருப்பதே உண்மை.

இவ்வாறு காட்சி முதலியவைகளால் அமையும் அறிவானது பிழைபடும் அறிவாகவும், முரண்பாடுள்ள அறிவாகவும், மாற்றங்கொள்ளுகின்ற அறிவாகவும் விளங்குகின்ற காரணத்தால் இவைகள் மூலம் நாம் உண்மையான அறிவைப் பெற முடியாது என்பது உள்ளுணர்வுக் கொள்கையினர் எடுத்து மொழியும் மறுப்பு.

காட்சி, அனுமானம் முதலிய வாயில்களுக்கு மாருக வேருெரு வழியை நமக்கு உணர்த்துகின்றனர் உள்ளுணர்வுக் கொள்கையினர். அவ்வழியை அவர்கள் அகக்காட்சி, உள்ளுணர்வு, அனுபூதி, மறைபொருள்நிலை என்ற சொற்களாற் குறிப்பிடுகின்றனர்.

கண் முதலியவாகச் சொல்லப்பெறும் ஐம்புலன்களின் துணை இன்றி, கருதல் அளவை எனப்பெறும் இணைத்துச் சிந்தித்தலின் துணை இன்றி, ஆன்ருேர்கள் கூறும் உயர்மொழிகளின் துணை இன்றி ஒருவன் அகவுணர்வு மூலம், அகக்காட்சி மூலம் நேராகவே உண்மைகளைத் தேர்ந்து விட முடியும் என்று வலியுறுத்துகின்றனர்.

உள்ளுணர்வுக் கொள்கையின் வகைகள் :

உள்ளுணர்வுக் கொள்கையை இரண்டு வகைகளில் விளக்கம் செய்கின்றனர்.

(1) தன் உண்மை அறிவு : இரண்டும் இரண்டும் [2+2] எவ்வளவு என்ற கேள்வியை ஆயிரம் மக்களிடம் கேட்டாலும் நான்கு என்ற ஒரே விடைதான் வரும்.

உலகில் காணப்பெறும் அமைதியின்மைக்குக் காரணம் என்ன? இக்கேள்வியைப் பத்துப் பேர்களிடம் கேட்டால் விடைகளும் பத்தாகவே இருக்கும். காரணம் என்ன? விடைகாண முற்பட்ட எல்லாருமே தத்தம் தனிநிலையில் சிந்திக்கின்றனர். தங்கள் தங்களின் தனித்தன்மைகள் விடைகளிலும் காணப்பெறுகின்றன. இந்த அடிப்படையை வைத்து நோக்கினல் எந்த ஒரு தனி மனிதனும் தன்னுடைய அகஉணர்வை அடிப்படையாக வைத்தே உண்மையை உணர்கிருன் என்பது தெரியவரும்.

" நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்"

என்பது திருக்குறள். இக்குறளில் 'தன் உண்மை அறிவு' என்று திருவள்ளுவரால் குறிக்கப்பெறுவது எதுவோ அதுவே உள்ளுணர்வு என்று விளக்கம் கூறுகின்றனர்.

இனி, திருவள்ளுவரே,

" மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை"

என்று கூறுகின்றார். நுட்ப அறிவு வேறு; நூலறிவு வேறு என்பதை இக்குறளால் உணரலாம். 'மதிநுட்பம்' என்பதற்கு இயற்கையான நுட்ப அறிவு என விளக்கம் கூறுவர் சான்றோர்.

'நுட்ப அறிவு வேறு, நூலறிவு வேறு' என்னும் கருத்துக்கு மாறாக, நூலறிவின் முதிர்ச்சியே நுட்ப அறிவு என்ற கருத்தும் அறிஞர்களிடையே காணப்பெறுகிறது. சான்றாக,

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்

என்ற செய்யுளைக் காணலாம்.

உள்ளுணர்வுக் கொள்கையினர் குறிப்பிடும் இவ்வகை உணர்வைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டு ஒன்றினால் தெளிவாக இன்னது என இனம் கண்டு பிரித்து விடலாம்.

சாத்தன் என்பவன் முதன்முதலாக ஒருநாள் கண்ணனைக் காண்கிறான். கண்ணனைக் கண்டவுடனேயே சாத்தன் என்பவன் உள்ளத்தில் கண்ணனைப் பற்றிய அறிவு தோன்றிப் படர்கிறது. 'கண்ணன் நல்லவன்' என்ற கருத்து, சாத்தன் உள்ளத்தில் தோன்றுகிறது. கண்ணனோடு பழகவில்லை. கண்ணனைப் பற்றி வேறு யார் சொல்லக் கேட்கவும் இல்லை. கண்ணனைப் பார்த்த மாத்திரத்தாலேயே எத்தகைய ஆதாரமும் இல்லாமல் 'கண்ணன் நல்லவன்' என்ற அறிவைச் சாத்தன் ஏற்றுக் கொண்டான். அத்தகைய அறிவைத் தந்தது சாத்தனின் உள்ளுணர்வு.

'காதலித்துத் திருமணம் செய்துகொண்டவர்கள் சுகமாக வாழ்வார்கள்' என்பது ஒரு கருத்து. இக்கருத்தைப் பற்பல வகையான சான்றுகள் காட்டி நிறுவுகின்றார் ஒருவர். ஆனால் "ஈன்றவர் வயத்தராகி இல்லறம் புணர்க நாளும்" என்ற கருத்தை ஆழமாகப் பற்றியிருக்கும் மற்றொருவர் காதல் மணம் பற்றிய கருத்தை ஏற்கவில்லை. காதல் மணம் பற்றிய கருத்துத் தவறானது என்றாவது வாதிட முடியுமா? என்று கேட்டால் அதுவும் அவரால் முடியாது. ஈன்றவர் வயத்தராகி இல்லறம் அமைத்துக் கொள்க' என்ற அவருடைய கருத்தையே வலியுறுத்தி

யாவது பேசுகிருரா? என்ருல் அதற்கும் தயங்குகிருர். 'காதல் மணம் நன்று' என்ற கருத்தை அவருடைய உள்ளுணர்வு ஏற்றுக் கொள்ளாமல் மறுக்கிறது என்பதே அதன் பொருள்.

இதுவே 'தன் உண்மை அறிவு' என்ற உள்ளுணர்வு வகையின் விளக்கம்.

(2) மனிதன் தன்னுடைய அறிவைத் தன்னினும் உயர்ந்த அறிவோடு இணைத்து விடுதல். இது ஒருவகை யோக முறை என்பர். மனிதன் தன்னுடைய அறிவை இறைவனுடைய அறிவில் கலக்க வைத்தல். பேரறிவோடு தன்னை ஒட்ட வைத்துக் கொண்டபோது அப்பேரறிவில் தோன்றுகின்றவைகள், தொடர்பு காரணமாக மனிதனுக்குந் தெரியும். இதனைப் பொதுவாகச் சாத்திர வல்லவர்கள் "அவனருளே கண்ணாகக் காணுதல்" என்றும், "அவனுரை தனதுரை யாக" ஞானசம்பந்தச் சுவாமிகள் அருளினர்கள் என்றும் கூறுவார்கள். வானெலிப் பெட்டியில் உள்ள விசைகளைத் திருப்பியவுடன் எங்கோ ஒலிக்கப்பெறும் ஒலி கேட்பதுபோல அமையும் முறை.

பெருமிழலைக் குறும்பர் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தம் கண்ணெனக் கொண்டு வாழ்ந்தும் அவரையே போற்றிப் புகழ்ந்தும் வந்த பரமயோகி. சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக்களத்திலிருந்து ஒருநாள் பதிகம் பாடும்போது தம்மைக் கயிலைக்கு அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிப்பை அமைத்தருளுகிருர். அச்சமயத்தில் கயிலைக் கடவுள் உள்ளத்தில் சுந்தரன் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது என்ற எண்ணம் தோன்றுகிறது. இந்த எண்ணம் கயிலைக் கடவுள் உள்ளத்தில் தோன்றிய அதே சமயத்தில் பெருமிழலைக் குறும்பர் என்ற பரமயோகியின் உள்ளத்திலும் தோன்றுகிறது. சுந்தரர் கயிலைக்குச் செல்லப் போகிருர் என்று உடனே அப்பரமயோகி உணர்கிருர்.

இவ்வாறு அமைகின்ற ஒன்றையே உள்ளுணர்வு என்றும் அகக்காட்சி என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனல் அகவுணர்வில் தோன்றுகின்ற இக்கருத்துக்கள் பெரும்பாலும் இவ்வுலகியலுக்கு அப்பாற்பட்டவைகளாகவே இருக்கின்றன. மேலும், அருளாளர்கள் சிலர் இத்தகைய அகக்காட்சியை, ஒருமை உணர்வைப் பெற்றுள்ளார்கள் என்பதைத்தவிர எல்லாருக்கும் இத்தகைய அகவுணர்வு அமையும் என்று கொள்ள முடியாது.

திறனய்வு

உள்ளுணர்வுக் கொள்கை உண்மையுடையதா, பிழையுடையதா என்று இங்கே வாதம் செய்வது வேண்டத்தக்கது அன்று. ஏனெனில், உள்ளுணர்வு எத்தகைய அடிப்படையில் தோன்றுகிறது என்பதை வரையறுத்துச் சொல்ல இயலாது. திருவள்ளுவரின் குறிப்பை நோக்கும்போது உள்ளுணர்வு அல்லது தன்னுண்மை அறிவு ஊழை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது என்று கூறலாம்.

ஆனல், வேருெரு வகையில் உள்ளுணர்வுக் கொள்கையைத் திறனய்வு செய்யலாம்.

உள்ளுணர்வுக் கொள்கை மூலம் வலியுறுத்தப்பெறும் அகக்காட்சி அல்லது உள்ளுணர்வு உலகியலில் தோன்றும் பல பிரச்சினைகளுக்கு உரிய விடைகளைச் சொல்ல முடியாத நிலையில் இருப்பதைக் காணலாம்.

நம் கண்ணுக்குத் தோன்றும் இவ்வுலகம் உண்மையா? பொய்யா? என வினவினால் அகக்காட்சியால் நேரான விடையை அளிக்க இயலாது.

விஞ்ஞானம் இவ்வுலகைப் பகுத்து ஆராய்கிறது; விஞ்ஞானம் பகுத்து ஆய்ந்து வெளியிட்ட முடிவுகளை மெய்ஞ்ஞானம் தொகுத்து ஆய்ந்து சில முடிவுகளை வழங்குகிறது. இவ்வாறு எந்த ஒரு பிரச்சினையையும் ஆய்வதற்கு என ஒரு அடிப்படையை வகுத்துக் கொண்டு, முறையான ஆய்வை நடத்தி, முடிவுகளை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் அகக்காட்சிக்கு இல்லை.

பல பிரச்சினைகளை அகக்காட்சி அல்லது உள்ளுணர்வு தொடாமலேயே விட்டு விடுகிறது என்பதைவிட, தான் வெளிப்படுத்தும் கருத்தை உண்மை என நிலைநாட்டுவதற்குரிய அடிப்படைக் காரணங்கள், ஆய்வு முறைகள் முதலியவைகளையுங்கூட, உள்ளுணர்வு பெற்றிருக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

சிந்தனை அறிவு வளர்ச்சிக்குத் தேவை. சிந்தனை வளரும்போது கருத்தமைவுகள் தோன்றுகின்றன. கருத்தமைவு இல்லையானால் அறிவு வளர்ச்சியே இல்லை என்றுகூடக் கூறிவிடலாம். கருத்தமைவு என்றால் என்ன? உள்ளது சிறத்தல் அல்லது பரிணாமம் என்பது ஒரு கருத்தமைவு. இது உயிரியல் துறையில் முதன்முதலாக இடம் பெற்றது. இது இப்போது பல்வேறு துறைகளில் பயிலப் பெறுவதைக் காணலாம். சமுதாய வளர்ச்சியை, அறிவு வளர்ச்சியை, கொள்கைகளின் வளர்ச்சியைப் பரிணாம முறைப்படி ஆராய்கிறார்கள்.

இவ்வாறு வருகின்ற அறிவு உண்மை உடையதாகவும் பிழை இல்லாததாகவும் இருக்கும் என்பது பொதுக் கொள்கை. ஆயினும், சிந்தனை வாயிலாகக் கருத்தமைவுகளின் துணைகொண்டு ஆய்ந்து வெளிப்படுத்தப் பெற்ற முடிவு அல்லது அறிவு உண்மை உடையது அன்று; பொருள்களின் உண்மை நிலையை அது உணர்த்தாது என்று கூறி, 'உள்ளுணர்வே' நமக்கு உண்மை அறிவை வழங்கத்தக்கது என்று உள்ளுணர்வுக் கொள்கையினர் வலிமையாக மறுத்துக் கூறுவது விந்தையானதே.

உள்ளுணர்வுக் கொள்கையானது சமய உணர்வுக் கொள்கையின் சார்பினால் வலியுறுத்தப் பெறுகிறது என்பதே உண்மை.

முடிப்புரை

மேலே குறிப்பிடப்பெற்றவாற்றால் அறிவாராய்ச்சியியலில் மூன்றாவது கொள்கையான உள்ளுணர்வுக் கொள்கையைப்பற்றி ஒருவாறு தெளிந்து கொள்ளலாம்.

—:o:—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தசகாரியம்

சிவாயநம

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

இத்திருவைந்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர்ச்சொல்லாம். சி என்பது சிவத்தையும், வா என்பது திருவருளையும், ய என்பது உயிர்களையும், ந என்பது மாயை, கன்மம், திரோதான சக்திகளையும், ம என்பது ஆணவ மலத்தையும் குறிப்பன. சொல் பொருளைக் குறித்தல் வேண்டும். பொருளைக் குறியாதன சொல்லாகா. "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதம் ஆம்." தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிற பொருளைச் சுட்டுதற் கண்ணேயாம் சொல்" என்பவற்றை இங்குக் கருதுக.

சிகாரம் வகாரம் இரண்டும் பதி. நகாரம் மகாரம் இரண்டும் பாசம். யகாரம் பசு. யகாரம் பாசத்தொடு கூடிப் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு என்னும் நான்கு தொழிற்கும் அகப்பட்டுப் பிறப்பிறப்புக்களுற்றுழலச் செய்வது சிகாரத்தின் ஊன நடனம் ஆகும். பஞ்சகிருத்தியத்துள் அனுக்கிரக தாண்டவம் எனப் போற்றப் பெறுவது அருளாகும். அஃதாவது, யகாரம் வகார சிகாரத்திடையுற்றும் பிறப்பிறப்பற்றும் பேரின்பம் நுகர்ந்தும் அழியாப் பெருவாழ்வு எய்தச் செய்வது. இஃது அச்சிகாரத்தின் ஞான நடனம். அருள்வு இதுவே.

"ஊனநாடகம் ஆடுவித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞானநாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே"

என்னும் திருவாசகமும்,

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞான நடம் தான் நடுவே நாடு"

என்னுந் திருவருட் பயனும் உண்மைச் சைவர் அனைவர்க்கும் தெரியும்.

அருணெறி, அந்நெறியில் முயலும் அருணடை; மருணெறி, இந்நெறியில் இயலும் மருணடை என்னும் நான்கும் சாத்திர சம்பிரதாய திருட்டியுள்ளார்க்குத் தெரியும். இவற்றுள் முன்னிரண்டும் ஞானக்கூத்து விளைவு. பின்னிரண்டும் ஊனக்கூத்து விளைவு. "அலகிலாவுயிர்கள் மலநடைக்கு இலையாய் அருணடைக்குண்மையாய் நின்ற .... அம்பல

வாணு" என்று "உலகுடைய நாயனர் கழிநெடில்" என்றதன் தலைத்திரு விருத்தம் உணர்த்துகின்றது. இது திருவாவடுதுறையாதீனத்தில் சிவதீக்கை பெற்றுச் சிவமானவர் திருவாக்கு. ஆதியில் இவர் வைணவராயிருந்தவர் என்பதும் அறிதற்பாலது.

பெரும்பாலோர் மருணெறியில் மலநடையுற்று நரகிற் செல்லும் மாக்களாகவே இருத்தல் நல்லோர் திருவுள்ளத்தை அலைக்கின்றது.

"கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக" என்றது திருவருட்பயன் முடிவு,

இதற்குத் தரிசனமாவது இது.

"சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்துச்
சென்ன மொன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி
மடுத்தானந்தம் பொழிந்து வரும் பிறப்பையறுத்து
முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி"

என்று அருணந்திதேவ நாயனர், தம் கருணை வெள்ளத்தில் அலைவதைக் கள்ளத் தலைவர் எல்லாரும் கருதுவாராக.

யகாரம் மகாரத்தொடு மருவியநிலை கேவலாவத்தை. அதுவே நகாரத்தொடு நண்ணியநிலை சகலாவத்தை. அது வகாரத்தொடு விரவும் நிலை சுத்தாவத்தை. வகாரம் சிவஞானம். யகாரத்திற்கு வகாரத்துச் சேர்க்கை ஞானசம்பந்தம். இதுவே திருஞானசம்பந்தர் பெற்றுப் "பெம்மான் இவன்" என்று சுட்டிக் காட்டிய பயனை விளைத்தது. அச் சுத்தாவத்தையில், யகாரம் மகாரத்தையும் நகாரத்தையும் முற்றும் நீங்கி வகார ரூபமாகவே இருக்கும். பல பிறவிப் பழக்கத்தால் (வேம்பு தின்ற புழு அவ்வேம்பை நோக்கி நிற்கும் தன்மைபோல) யகாரம் அசத்தை நோக்கும் அப்போதெல்லாம் ஞானப்பியாசம் செய்து, அந்த (மெய்ஞ்ஞான)ப் பயிற்சியால், சிகாரத்தை உற்றுச் சிவானந்தம் ஒன்றே நுகர்தல் சுத்தாவத்தை உற்ற ஆன்மாவின் கடனாகும். சுத்தாவத்தையே உயிர்க்கு வீடும் ஆகும். சிவாநந்தம் பெறுவதே பேறு. சுத்தாவத்தையெய்திய ஆன்மா பற்று முற்றும் விட்டதால் வீடுற்றதாகும். வீடும் பேறும் கூடியதே பேரின்பநிலை. வீடு பாச வீடு. பேறு சிவப்பேறு. சுத்தாவத்தையெய்தாமற் பாச வீடும் சிவப்பேறும் கூடல் இயலாது. அப்பாசவீடும் சிவப்பேறும் கூடியதே சைவ சித்தாந்த சுத்தாத்துவைத நிலை. ய-வுக்கு ந+ம நீக்கம் பாசவீடு. வா+சி பெறல் சிவப்பேறு என்று திருவைந்தெழுத்தில் வைத்து இதனை உணர்வதே தெளிவுறுவது. சிவபுண்ணியம், அறியாது செய்வினை-அறிந்து செய்வினை என இருவகைப்படும். முன்னது அபுத்தி பூருவ புண்ணியம். பின்னது புத்தி பூருவ புண்ணியம் எனப்படும்.

அப்புண்ணியமே சிவாநுபவம் முடிவான எல்லாம் ஆக விளங்கும். சரியை, கிரியை, யோகம், ஞானம் எல்லாம் சிவபுண்ணியமே. மெய்கண்ட தேவர் 'போகமாய்த் தான் விளைந்த பொற்பினன்' (சிவஞானபோத வெண்பா, 11:-2) என்றருளினர். (வெண்பாக்களும் மெய்கண்டதேவர் அருளின எனல் மரபு.) அச்சிவபோகமாவது உண்மை ஞானம் பத்து வகையுள் ஒன்று.

1. அபுத்தி பூருவ புண்ணியம் 2. புத்தி பூருவ புண்ணியம் 3. உபாயச் சரியை 4. உபாயக் கிரியை 5. உபாய யோகம் 6. உபாய ஞானம் 7. உண்மைச் சரியை 8. உண்மைக் கிரியை 9. உண்மை யோகம் 10. உண்மை ஞானம்

அவ்வுண்மை ஞானம் பத்து வகைப்படும். அவை :

1. தத்துவரூபம் 2. தத்துவ தரிசனம் 3. தத்துவ சுத்தி 4. ஆன்ம ரூபம் 5. ஆன்ம தரிசனம் 6. ஆன்ம சுத்தி 7. சிவ ரூபம் 8. சிவ தரிசனம் 9. சிவயோகம் 10. சிவ போகம் (ஆன்மலாபம்) என்பன. இவை தசகாரியம் ஆகும். இத் தசகாரியம் (பத்துச் செயல்) உண்மை ஞானத்தின் விளைவு ஆதலால், ஞானத்தால் ஆகிய செயல் என்பதை மறத்தலாகாது. ஞானத்தால் ஆகும் செயலுக்கு வடிவம் கருவி முதலியன வேண்டா.

இப்பத்தும்

உண்மை ஞானத்தின் வகையாதலால், உண்மை ஞானம் ஆகிய வகாரமும் அவ்வுண்மை ஞானத்தைப் பெற்று அதுவேயாகிய யகாரமும் (ஆன்மாவும்) அன்றி, அங்கு நகாரம் இல்லை. இன்மையால் சிவஞானிகளின் அப்பியாச ஞானசாதனமே தசகாரியம் என்றுணர்தல் பக்குவ ஞானசீலர்க்கே இயல்வதொன்றாகும். ஆதலின்,

1. யகாரம் வகாரமானபின் நகாரத்தை அந்த வகார அறிவால் அறிவதே தத்துவ ரூபம் முதலிய மூன்றுமாகும்.

2. யகாரம் நகாரத்தின் நீங்கியவாற்றை (அச்சிவஞானத்தால்) உணர்ந்து தன்னைத் தனித்துக் காண்டல் ஆன்மரூபம்.

3. யகாரம் தத்துவரூப தரிசன சுத்தியுற்றது சிவஞானத்தால் தான்; தன்னறிவால் அன்று. தன்னறிவுக்குச் சுதந்திரம் இன்று. சிவஞானம் உணர்த்த யான் உணர்ந்தேன் எனத் தன்னை உள்ளவாறுணர்தலே ஆன்மதரிசனம்.

4. வகாரம் யகாரத்திற்குத் தத்துவரூபதரிசன சுத்தியாக்கியதொடும் அமையாமல் அவ்வழியால் தன்னைக் காட்டியதே சிவரூபம். அஃதாவது சிவனது இச்சை ஞானக்கிரியா சத்திரூபம்.

5. யகாரத்தை வகாரமாக்குவதே ஆன்மசுத்தி. அதில் சிவதரிசனம், சிவயோகம் இரண்டும் நிகழ்கின்றன. இவ்வுண்மையை இக்கட்டுரை முடிவிற் காண்க.

6. வகாரமாய் நின்ற யகாரம், சிகாரத்தொடு சேர்ந்து அவ் வகாரத்தை மறந்து சிகாரமாய் நிற்பதே சிவயோகம். இதுவே ஆன்மலாபம். 'தாயை மறந்து ஏயுமதே நிட்டை.

இவற்றைப் பின்வருமாறு உணர்தல் வேண்டும்.

1. தத்துவரூபம்
2. தத்துவ தரிசனம்
3. தத்துவ சுத்தி
4. ஆன்ம ரூபம்

} நின்மலசாக்கிரம்

5. ஆன்மதரிசனம் + (7) சிவரூபம், நின்மலசொப்பனம் 6. ஆன்ம சுத்தி + (8) சிவதரிசனம் + (9) சிவயோகம் (இம்மூன்றும் ஒரு நிலை நின்மலதுரியம் 7. (ஆன்மலாபம்) + (10) சிவபோகம் நின்மலதுரியா தீதம். நின்மல சுமுத்தியில் காரியம் ஒன்றும் இல்லை.

இப்படிப் பத்துக் காரியமும் ஏழாயடங்கும். முதல் நான்கும் அல்லாதன இணைந்து நிகழ்தல் காண்க. இத் தசகாரியத்தைத் திருவைந் தெழுத்தில் வைத்துணர்தல் நன்றாகும். யகாரம் மகாரத்தையும் நகாரத்தையும் நீங்கிற்று. வகாரத்தொடு கூடிற்று. வகாரத்தின் துணையால்தான் யகாரம் அவ்விரண்டின் நீங்கிற்று. அந் நீக்கமும் வகாரத்தின் தோற்றமும் யகாரத்திற்கு ஒரே காலத்தில் உறும் நிகழ்ச்சியே. அந்நிகழ்ச்சியே மலபரிபாகமும் சத்திநிபாதமும் ஆகும். அவை வேறல்ல. இருவினையும் தனுகரணபுவன போகங்களும் நகாரத்தன ஆதலின் நகாரம் நீங்கிய போழ்தே அவையெல்லாம் அற்றன. அப்போது யகாரம் முத்தன் ஆகிய உண்மையை உணர்க. ஊர் பேர் உரு திரு ஒன்றுமில்லாதது அவ்யகாரம். அந்நிலையில் அதுமுதல் வகார சிகாரத்திடை நிற்பதே யகாரத்துநிலை. "ஆசின் நவா நாப்பண் அடையாது அருளினல் வாசியிடை நிற்கை வழக்கு" என்னும் உண்மை இங்கு உணர்தற்பாலது. அவ்வுண்மை நிலையே அருள் நிலை. இந்நிலை அருள் நெறியில் அருள் நடையுற்று அடைந்த (யகாரத்தின்) நிலை. சிவனது அருட் (பேராநந்தக்) கூத்தும் இந்நிலையில் நிகழ்வதே. இங்கே தத்துவரூபம் முதலிய பத்தும் வகாரமாகிய ஞானத்தால் நிகழும். யகாரம், நகார மகாரம் இரண்டும் அற்று வகாரமாகிச் சிகாரத்தை அனுபவிக்கும் உண்மை ஒன்றே அன்றி அங்கு வேறு யாதும் இல்லை. உண்மை விளக்கம் உண்மை நெறி உண்மை நெறி விளக்கம் ஞான வாய்மை "வறுந்தொழிற்கு வாய்மை பயன்" 'உண்மையுணர்ந்தார் என்றுந்தீபற' என்பவற்றிலுள்ள உண்மை, வாய்மை என்ற பெயரால் உணர்த்தப்பட்டது. (திருவருளே) திருவடியேயாம்.

தசகாரியத்துள் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம் என்ற நான்கும் எந்நிலையின? அந்நிலையை நன்கு உணர்தல் வேண்டும். தத்துவ ரூபம் முதலிய மூன்றும் பாசத்தின் நிலை. ஆன்ம ரூபம் பசுவின் நிலை. அவற்றுள் தத்துவ சுத்தி என்பது மாயாகாரியமான தத்துவங்களின் நின்றே தத்து வங்களை நீக்குதல் இயலுமோ? தத்துவங்களை ஞானத்தால் நீக்குவதே தத்துவ சுத்தியாகும். ஆகவே அந்நான்கும் திருவருளால் அத் திரு வருளுருவாய ஆன்மாவின்கண் நிகழ்வனவே என்பது பெறப் படும். படவே யகாரம், வகாரம் இரண்டும் (ஆன்மாவும் திருவருளும்) மட்டும் கூடிய கூட்டத்தில் அந்நான்கும் நிகழ்வன என்பது தெளிவாகும். அப்போது ஆன்மா தன்னை உணர்கிறது. வடிவு கண்டதன் பின்னரே வடிவுடையதைக் காண்டல் வேண்டும். ஆன்மரூபம் கண்டதன் பின்னரே ஆன்மக் காட்சி கூடும். தத்துவங்களின் நீங்கிய அவ்வேளையே நீங்கும் தானும் (ய, ஆன்மா) நீக்குந் துணையாகிய திருவருளும் ஒருங்குள்ள

நிலை புலப்படும். படுதலாற்றன் சிவரூபத்தின் நிகழ்வது ஆன்ம தரிசனம் ஆயிற்று. இஃது எட்டாவது சூத்திரப் பொருள் கொண்டு தெரிந்து கொள்ளத்தக்கது.

ஐம்புலவேடரின் வளர்ந்து அயர்ந்தேன் என்ற உணர்வு எப்போது உண்டாயிற்று? தம் முதல் குருவும் ஆகி உணர்த்தியபோது உண்டா யிற்று. தம் முதல் சிவம். அம்முதலின் உருவே சிவரூபம். சிவத்தை முதல் என்றும் சிவகுருவைச் சிவரூபம் என்றும் உணர்தல் பகுத்துணர் வின் பயனாகும். ஞான குருவை ஞானம் எனல் குற்றம் அன்று. குற்றம் அன்றாயும் விளங்குதற்பொருட்டு, சிவம், அருள், அருளுரு என மூன்றும் திருவருட் பயனில் வெவ்வேறாகக் கூறப்பட்டன. அதனால், சிவம் தம் முதல் எனவும் அருளுரு (பரநாதம்) சிவரூபம் எனவும் சிவஞானபோதம் உணர்த்திற்று. அருளுருவும் அவ்வுருவின் முன்னிலையாய அருளும் ஒன்றேயாம். அருள் உயிர்க்குயிராய் நின்றளித்தது. அதனை உயிர் காணவில்லை. அவ்வுயிர் அவ்வருளைக் காண அருளே குருவாயிற்று. அறியாமை (அறியாமல்) உள்நின்று அளித்ததே (திருவருளே) காணும் (அறியும்) குறியாகிய குரு. அது நீங்காது. அருள் உயிரின் நீங்காதது போல அருளுருவாகிய குருவும் நீங்காது குருவை' நாதன், கோ, மன்னன், வேந்தன், இறைவன் என்னும் பெயராலும் குறிப்பது மரபு.

நாதன்றாள் வாழ்க. 'ஏகனும் ஆகி அநேகனும் ஆகி, நாதனு மானான், ஏகன் அநேகன் இறைவன் மாயப்பிறப்பறுக்கும் மன்னன் வேகம் கெடுத்தாண்ட வேந்தன், 'குருவே உரை உணர்வற்றதோர் கோவே' என்னும் திருவாசகம், திருவுந்தியார், திருமந்திரங்களால் உணரப்படும் அது.

சிவம் குருவாய் வந்துதான் உயிர்க்குப் பிறப்பிறப்புத் தீர்த்தாட் கொள்ளும். குருவாய் வாராமல் சிவம் உயிரை ஆட்கொள்ளாது.

> "அன்று முதலாகவே ஆருயிர்கட் காருயிராய்
> நின்றருளும் தம்பிரான் நீங்காமல்—என்றும்
> கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே
> குருவாய் அருளாமற் கூறு"

என்ற துகளறு போதத் திருவெண்பாவால் அவ்வுண்மையை அறிய லாம். அறிந்தால், "தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" என்பது நன்கு விளங்கும். இதுவரையில் சிவரூபத்தின் நிகழ்வது ஆன்ம தரிசனம் என்பது விளக்கப்பட்டது. அவ்விளக்கத்தினிடையில், சிவரூபம் குரு என்பது தெரிவிக்கப்பட்டது. "அறியாமை யுண்ணின்றளித்ததே காணுங் குறியாகி நீங்காத கோ" என்ற திருக்குறள் வெண்பாவின் பொருளும் எடுத்துக்கோளாயிற்று. சிவரூபம் கண்ட ஆன்மாவிற்கு அது ஞானதரிசனம் ஆயிற்று. ரூபம் இன்றித் தரிசனம் இல்லை. பிண்டத்தில் அருளால் நிகழ்வது ஞான தரிசனம். அந்நிகழ்ச்சிக்குச் சிவரூபத் தோற்றம் இன்றியமையாதது. அண்டத்தில் வைத்துணர அருளால் நிகழ்வது பரை தரிசனம். அப்பரை தரிசனத்தில் உடன் நிகழ்வது சிவதரிசனம். அப் பரையுருவாக ஆன்மா நின்று சருவவியாபகத்தை எய்திய அப்போதே அவ்வான்மா சிவத்தொடு கூடுகின்றது. அக்கூட்டமே யோகம். அது சிவத்தொடு கூடியதால், சிவயோகம். பிண்டத்தில் ஞானதரிசனம் எய்தி ஞானத் தொடு கூடியது, அது ஞானயோகம். அண்டத்தில் பரை தரிசனம் எய்திய ஆன்மா சிவத்தொடு கூடியது, அது சிவயோகம். இச் சிவ யோகத்தினும் வேறு சிறந்த யோகம் இல்லை.

(தொடரும்)



கற்பதற்குரிய நூல்கள்

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

நூலாசிரியனுதல் எளிதன்று; பழுத்த மனத்தையுடைய சான்ரோர்களே சிறந்த நூலாசியராக முடியும். உயர்ந்த நூலாசிரியர்கள் எந்த நாட்டிலும் மலிவான சரக்காக இருக்கமுடியாது. எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் எண்ணிக்கையில் வளர்ந்திருப்பது அறிவினுடைய தரவீழ்ச்சியைத்தான் நினைவூட்டும். திருக்குறளை எழுதிய திருவள்ளுவரும் நூலாசிரியர், கூளப்பநாயக்கன் காதல் எழுதியவரும் நூலாசிரியரென்ருல், இது என்ன நியாயம்? திருக்குறளும் ஒரு நூல், கூளப்பநாயக்கன் காதலும் ஒரு நூலென்ருல், அங்ஙனம் சொல்பவரின் அறியாமையை என்னென்பது? ஓதுபவரின் உள்ளத்தை உருக்கி உயர்த்தும் திருவாசகமும் ஒரு நூல். தீமையைக் கண்டிக்கும் பாவனையில் சிருங்கார ரசத்தையும் சேர்த்து, ஊடே இரண்டு மூன்று பக்திச் சொற்களையும் சேர்த்தாலே அந்த நூல் பக்தி நூலாகி விடமுடியுமா? திருவாசகத்துக்குப் பக்கத்தில் அதை வைத்து எண்ணத்தான் செய்யலாமா? உணவு, உண்பதில் நாவுக்கினியதா? உடலுக்கினியதா? என்று ஆராய்ந்து உடலுக்கினிய உணவையே தேர்ந்தெடுக்க வேண்டும். இயலுமாயின் நாவுக்கும் இனியதாக அமைந்து உடலுக்கும் இனியதாயின் அது முழுமையான நல்ல உணவு. அதுபோல் கற்க இனிய மொழிநடையும். உயிர்க்கு நலஞ்சேர்க்கும் உயர்கருத்துமுடைய நூல்களாக இருப்பன நல்லவையாம். இத்தகைய பெருஞ்சிறப்புப் பொருந்திய நூல்களுள் தலையாயது திருக்குறள். திருக்குறளை உள்ளவாறு கற்போர் உள்ளம் ஒருபொழுதும் தரத்தில் தாழாது.

திருக்குறளோடு ஒப்ப வைத்தெண்ணப்படும் நூல்கள் வேறு சிலவும் தமிழில் உண்டு. நம்முடைய சைவ நாயன்மார்கள் அருளிச் செய்த திருமுறைகள் தேனினும் இனிய சுவையுடையன. அறியாமை இருளை யகற்றும் அகல் விளக்காகவும், ஞானப் பேரொளியை வழங்கி வாழ்விக்

கும் அருமருந்தாகவும் திகழ்வன். சேக்கிழார் தந்த திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணத்தைப் போன்றதொரு நூல் வேறு எம்மொழியிலும் தோன்றவில்லை. 'புராணம்' என்ற பெயரிருப்பதால் யாரும் அந்த நூலின் சிறப்பினைப் பற்றி ஐயுற வேண்டியதில்லை. பெரியபுராணத்தில் வருகிற அடியார்கள், தம் வாழ்க்கையில் குறிக்கோள் வைத்துக்கொண்டு போராடியவர்கள். பெரியபுராணம் அன்பின் பிழிவு; தொண்டின் சாறு. நூல்முழுதும் திருவருட் பதிவு நிறைந்திருக்கிறது. திருவரங்கத்து அமுதனின் திருவருளில் ஆழக்குளித்த ஆழ்வார்களின் அமுதத் தமிழ் மிகவுயரியது. அந்தத் தமிழ் அமரகுலத்துச் சுவையினும் விஞ்சிய சிறப்புடையது. இத்தகைய நூல்களை நாள்தொறும் முறையாகக் கற்பது-திரும்பத் திரும்பக் கற்பது, நினைந்து நினைந்து கற்பது, உணர்வது வாழ்க்கையை உயர்த்தும். இதுபோல ஆங்கிலத்தில் ஜேம்ஸ் ஆலன் இயற்றிய வாழ்வியல் நூல்களும், மார்க்கஸ் அரேலியஸ் எழுதிய நாட்குறிப்புக்களும் வாழ்க்கையை உயர்த்தும் உயரிய நூல்கள். ஏன்? ஒன்றை மறந்து விட்டோம். தமிழ் இலக்கியங்களில் சங்க காலத்து இலக்கியங்கள் விழுமியனவே. அவற்றில் அகத்துறை இலக்கியங்கள் இருந்தாலும் அவை மிகவுயர்ந்த அகத்துறை இலக்கியங்கள். காப்பியங்களில் இளங்கோவடிகளின் சிலம்பு சாலச் சிறப்புடையது. இத்தகைய நூல்களைத் தமிழராய்ப் பிறந்தோர் படிக்காமலும், படித்து உணராமலும், உணர்ந்து செயற்படாமலும் வாழ்ந்து மடிவது வம்பேயாம்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

இருள் இரவில் ஒருமூலைத் திண்ணையில் நான்பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே
பொருள் உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்
போக்கியருள்புரிந்த என்றன் புண்ணிய நற்றுணையே!
மருள் இரவு நீக்கிஎல்லா வாழ்வும் எனக்கருளி
மணிமேடை நடுவிருக்க வைத்த ஒருமணியே!
அருள்உணவும் அளித்தென்னை ஆட்கொண்ட சிவமே
அம்பலத்தென் அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.

—திருவருட்பிரகாச வள்ளலார்.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT ARULOSAI

FORM IV (See Rule 8)

1. Place of Publication	9, Maharaja Surya Rao Road, Madras-600018
2. Periodicity of its Publication	Monthly
3. Printer's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
4. Publisher's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
5. Editor's Name	A. Narayanaswami, B.A.
(Whether citizen of India)	Yes
(if foreigner, state the country of origin)	......
Address	9, Maharaja Surya Rao Road Madras-600018
Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	Tamil Nadu Deivika Peravai 9, Maharaja Surya Rao Road Madras-600018

I, A. Narayanaswami hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 15—2—74

A. Narayanaswami, B.A.
Publisher.

அருளோசை ஆண்டுச் சந்தா ரூ. 5 மட்டும்

ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது

அனுப்பவேண்டிய முகவரி :

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,
9, மகாராஜா சூர்யராவ் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை-600018.

உ

திருவருட்பா

கண்ணேங்கு நுதற்கரும்பே கரும்பினிறை அமுதே!
கற்கண்டே! சர்க்கரையே! கதலிநறுங் கனியே
விண்ணேங்கு வியன்சுடரே! வியன்சுடர்க்குட் சுடரே!
விடையவனே! சடையவனே! வேதமுடிப் பொருளே!
பெண்ணேங்கும் ஒருபாகம் பிறங்கு பெருந்தகையே
பெருமானை ஒருகரங்கொள் பெரியபெருமானே!
எண்ணேங்கு சிறியவனேன் என்னினும் நின் அடியேன்
என்னைவிடத் துணியேல் நின் இன்னருள் தந்தருளே
—திருவருட்பிரகாசவள்ளலார்.

* * *

Edited, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.